

# ரமணோதயம்

ஜனவரி 2019
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக்
கொள்கிறோம்

உதயம் 18 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்

ஜனவரி 2019

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2019


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | 19 |
| 3 | குரு வகுத்த பாதையில் பிறழாமல் செல்க — வே. கணேசன் | 23 |
| 4 | அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம் பகுதி — டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 33 |
| 5 | மூன்று நிலைகளின் மறைபொருள் — ராம் மோஹன் | 46 |
| 6 | இனிவரும் திருநாட்கள் | 51 |
| 7 | ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை | 52 |
| 8 | ரமணாயனம் — க்ரேஸி மோஹன் | 58 |
| 9 | எல்லா மைலார்ட் — வி. நிரஞ்சன் | 63 |
| 10 | செய்திகள் | 73 |


முன் அட்டை: விருபாக்ஷ குகை

பின்அட்டை: அருணாசலத்தின் தோற்றம் கந்தாச்ரமம் செல்லும் பாதையிலிருந்து

# ஆசிரியர் உரை

## ஏது அவன் ஊர்?
## ஏது அவன் பேர்?

புத்த நிகாயத்தில் கூறப்படும் ஆழ்ந்த பொருள் பொதிந்த நிகழ்ச்சி இது. பூர்ண ஞானம் அடைந்த புத்தரிடம் வந்து தேவர்கள் வேண்டினர்: "இப்போது நீங்கள் பெற்றுள்ள போதிசித்தம் என்பது என்ன என்பதை விளக்கிக் கூறுங்கள்". புத்தர் சொன்னார்: "'நான்' எதையும் பெறவில்லை. மனம் இருக்கும்வரை எதையேனும் அடையவேண்டும் என்று விரும்பிக் கொண்டே இருக்கின்றது. நானோ எல்லாவற்றையும் இழந்து விட்டேன். நான் எதையும் அடையவில்லை. எதையும் பெறவில்லை. நான் எதையும் சாதிக்கவில்லை. நான் அடைந்துள்ள இந்நிலையில் சாத்தானே கரைந்து மறைந்து போய் விடுகிறான். நான் இப்போது இல்லை. 'நான்' இருக்கும்போது துன்பத்தில் இருந்தேன். 'நான்' இல்லாதபோது எல்லாமே ஆனந்த மயமாகவே உள்ளது. தன்முனைப்பு (Ego) இருக்கும்வரை துன்பம். தன்முனைப்பு மறைந்தால் பேரின்பம்."

பகவான் சிவப்பிரகாசம் பிள்ளைக்குப் பதில் அளிக்கையில் "நினைவுகள் எல்லாம் நீக்கிப் பார்க்கையில் தனியாக மனம் என்று ஒன்று இல்லை. ஆகையால் நினைவே மனதின் சொரூபம். விழிப்பிலும் கனவிலுமே நினைவுகள் எழுகின்றன. உலகமும் எழுகின்றது. எப்படி சிலந்திப் பூச்சி

தன்னிடமிருந்தே நூல் நூற்று, மறுபடியும் தன்னுள் இழுத்துக் கொள்கிறதோ, அதே போன்று மனமும் தன்னிடமிருந்து ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னுள் ஒடுக்கிக் கொள்கிறது. மனத்தின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டே போனால் தானே மனமாய் முடியும். ஒவ்வொரு எண்ணமும் தோன்றுகின்றபோதே கவனமாய் 'இது யாருக்கு உண்டாயிற்று?' என்று விசாரித்தால், 'எனக்கே' என்று தோன்றும். பிறகு அந்த 'நான் யார்?' என்று விசாரித்தால் மனம் பிறப்பிடத்திற்குத் திரும்பிவிடும். எழுந்த எண்ணமும் அடங்கிவிடும்." இங்ஙனம் மனம் இதயத்தில் அடங்கினால் எல்லா நினைவுகளுக்கும் மூலமான 'நான்' என்பது போய் எப்போதும் உள்ள 'தான்' மட்டும் விளங்கும் என்று விளக்குகிறார் பகவான். இந்த அடிப்படை உண்மையை பகவான் மூலம் தெளிவாக அறிந்த ஹம்ஃப்ரீஸ், 'இன்டர்நேஷனல் ஸைகிக் கெஜட்' என்ற லண்டன் பத்திரிகையில் வெளியிட்டார். அதில் இறுதி உண்மையாக ஆன்ம விசாரணையில் மனம் மாய்ந்தபின் மீதி இருப்பது உள்ளது உள்ளபடியான உணர்வு மாத்திரமே. அதுவே 'ஸத்' என்பது விளக்கப்பட்டுள்ளது. நித்யமான வஸ்து எது, அநித்யமானது எது என்பதை ஆய்ந்து அறிந்து, நித்ய வஸ்துவைப் பற்றிக் கொண்டால் உலக விஷயங்களின் மேல் உள்ள பற்று தானே விடுபடும். பகவான் மிகவும் போற்றிய ஞானியாகிய தத்துவராயர் இதனை அழகாகக் கூறுகிறார்.

*விடும் ஆறு என விட்டபின் மேல் உறும் ஆறு என்ன நினைந்து*
*தடுமாறி நிற்கும் சனர், வம்மினோ என்ன நினைந்து! சகத்தினது*
*கெடுமாறு கண்டு கெடாதவாறு என்றும் வேண்டினம் - கேள்வனுக்கு*
*ஆட்படுமா நினையப்படுமாகில் நெஞ்சில் பயம் கெடுமே*
*- (இரட்டை மணிமாலை, 5)*



பொருள்: "எப்படி இந்தச் சம்சாரப் பற்றை விடுவது? அப்படி விட்டுவிட்டால் அதன்பின் செல்லும் வழி என்ன என்று குழம்பி நிற்கும் மக்களே! இவ்வுலகில் எது அநித்யமானது என்று ஆய்ந்து, அதை விலக்கி, நித்ய வஸ்துவையே நாடுகிறோம். அந்த நித்ய வஸ்துவான ஆத்மாவுக்கே ஆட்படுவோமானால், நெஞ்சில் சம்சார பயம் நீங்கி ஒழியும்"

இதற்கு வழிகாட்ட வந்தவரே நம் சத்குரு பகவான் ரமணர். மீண்டும் தத்துவராயரின் வாக்கிலேயே இதைக் காண்போம்.

ஒழியவரும் உடலின் ஒருகலவி அற உதறி உயிர்கள் உணர்வோர்
மொழியவரு மறுகல் அறுபதம் அது எனும் உலகுகளின் முடிவு புகலே
- (மோகவதைப் பரணி, 14)

(பொருள்: மாய்வதற்காக வந்துள்ள இவ்வுடலின் மீதுள்ள நினைப்பினை உதறித் தள்ளி எல்லாவற்றிற்கும் முடிவாய் உள்ள ஆத்மபதம் ஒன்றே நித்யமான பொருள்.)

*“ஒன்றுமா ஆய்வற நிற்பதில்லை*
*உளத்து ஒழுங்கு அற யாவையும்*
*பொன்ற மாய்வது முத்தி என்றருள்*
*போதியான் அடி ஓதுவாம்.”*

*- (மோகவதைப் பரணி, 15)*

*(பொருள்: உளத்தில் ஆத்ம விசாரம் செய்தால் நித்யாநித்ய வஸ்து விவேகம் கிடைக்கும் என்று காட்டி, அநித்ய பொருட்களை விடுத்து நித்யமான ஆத்மாவில் ஒன்றுபடலே முத்தி.)*

*எங்ஙனம் அநித்ய வஸ்துக்களில் இருந்து நீங்கி நித்ய வஸ்துவான ஆத்மாவைப் பிடிப்பது? நமக்குப் பற்றுக்கோடாக நித்ய வஸ்துவின் ஒரு சொரூபம் வேண்டாமா? எதைப் பற்றிக் கொள்வது என்பதற்கு அழகாக வழிகாட்டுகிறார் பகவான். குருநாதனுடைய சொருபமே உலகுக்குக் காரணகர்த்தா ஆகிய ஈஸ்வரனின் சொரூபம். இதை விடாமல் பற்றிக் கொள். வேறு வழிகளில் சென்றால் பந்தங்கள் உன்னைப் பற்றிக் கொள்ளும். எனவே அநித்திய வஸ்துக்களை உதறித் தள்ளுவற்கான வழி, சத்குருவின் உள்ளத்தில் தியானித்தலே என்கிறார் பகவான்.*

*“நானே பரப்பிரம்மம், நாதன், உலகுக்கு ஈசன்*
*ஆன இந்நிச்சயம் ஆர்புருடன் - தானே, நண்*
*முத்தனாம் அன்றி முரண்வழியில் செல்புருடன்*
*பெத்தனாம் என்று நீபேண்.*

*- (ஞானாசார விசாரப் படலம், 50)*

*பொருள்: எனது உண்மையான சொரூபம் எங்கும் நிறைந்துள்ள ஏகவஸ்துவான பரப்பிரம்ம சொரூபம். சத்குருவின் சொரூபமே, உலகிற்கு முழுமுதல் காரணமாகிய ஈஸ்வரனின் சொரூபம். இந்தத் திடமான நம்பிக்கை உடையவனே முக்தி நிலையை அடைகிறான். குரு வடிவம்கொண்டு இங்கு வந்துள்ளது.*

*தனது உண்மை சொரூபமே பரப்பிரம்ம சொரூபம். தனக்கு அந்த உண்மையை அறிவிக்கும் குருநாதனின்*

சொரூபமே உலகினுக்குக் காரணமான ஈஸ்வரனது சொரூபம் என்பதனை அறுதியிட்டு அறிவிக்கிறார் பகவான். மனது பரிணாமம் அடைந்த சமயத்தில் இறைவனே குருவடிவம் கொண்டு உன்முன் தோன்றி சத்யத்தைப் போதித்து, மனதை உள்முகமாக்கி ஒருமுகப்படுத்துகிறார்.

"ஈர்த்ததைத் தன்போல் அசலமாய்ச் செய்யும்" என்று பகவான் அருணாசல பதிகத்தில், விளக்கும் அருட்செயல் இது.

சத்குருவின் தாள் பணிந்து சேவைசெய்து, அதேசமயம் ஐயங்கள் அனைத்தும் தீரும்வரை, விடாமல் கேள்விகேட்டு தன்னுள் வெறுமையில் 'பரிப்ரஸ்னே ஸேவயா' என்ற நிலையில் இருந்து, பகவான் கூறும் ஸர்வ சூன்யப் பதம் என்னும் ஏதுமற்ற வெறுவெளியில் கரையவேண்டும்.

"விடயத்தில் ஆசைவிடாதே குரங்கை
விடச் சலி சித்தத்தை விடாது - மடக்கிச்
சருவ சூன்யப் பதத்தில் தாபிக்க அஃ்தான்
நிர்வாணம் உற்றிடுவன் நேர்."

- (ஞானாசார விசாரப் படலம், 27)

பொருள்: "விஷய போகங்களின் மேல் உள்ள ஆசையானது ஒழிந்து போகாமல் திரும்பத் திரும்ப அதையே நினைத்து குரங்கை விட அதிகமாக மனது அலைகிறது. மனத்தை வெளிவிஷயங்களைப் பற்றித் திரியவிடாமல் உள்முகமாகத் திருப்பி, ஸர்வ சூன்யமான பதத்தில் நிலைக்கச் செய்வாய். அங்ஙனம் செய்பவன் நிர்வாண பதமாகிய முக்தி நிலையை அடைவான்."

இப்பாடலில் பகவான் புத்தரின் உபதேசக் கருத்துக்களான 'சூன்யபதம்' மற்றும் 'நிர்வாணம்' என்ற இரண்டையுமே இறுதி நிலையை அடையக்

குறிப்பிடுகிறார். 'சூன்யம்' மற்றும் 'நிர்வாணம்' என்பது வெறுமையைக் குறிக்கும். இதுவே இறுதி.

'ராப்பகலில்லா வெறுவெளி' எனப் பகவான் அக்ஷரமணமாலையில் குறிப்பிடுகிறார். நீங்கள் வெறுமையானவுடன் நீங்கள் நிரப்பப் படுகிறீர்கள்! ப்ரபஞ்சம் அனைத்தும் அப்போது உங்களுக்குள் அடங்குகிறது. எல்லையற்ற வெறுவெளி, ராப்பகலில்லா வெறுவெளி எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறது. இன்றே, இங்கே, இப்பொழுதே உங்களுக்குள் நீங்கள் நிரப்பி வைத்து இருப்பவை அனைத்தையும் தூக்கி எறியுங்கள் - உங்கள் துயரங்கள், கோபம், தன்முனைப்பு, பொறாமை, இன்பங்கள் - அனைத்தையுமே, எத்தகைய வேறுபாடும் இன்றி, வெறுப்பு விருப்பு இன்றித் தூக்கி எறியுங்கள். எந்த நேரத்தில் முழுமையாக இழந்து விடுகிறீர்களோ, அப்போதே நீங்கள் முழுமையாக எல்லாமுமாக இருப்பதைக் காணலாம்.

'எல்லாம் அற என்னை இழந்த நலம்' என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

ஒன்றுமற்ற நிலை எய்துவதே தியானம். மனம் இல்லாதபோது அங்கு பூரண சுதந்திரம் உள்ளது.

தாவோ ஞானி சுவாஸ்தஸூ ஒக் அழகான பாடலில் கூறுகிறார்:

"கிழக்கே வாழும் இந்தப் பறவையைப் பற்றிக்
கேள்விப்பட்டு இருக்கிறாயா?
இந்தப் புராணப் பறவையாகிய தீப்பறவை
முழுமை அடைவதே இல்லை!
கிழக்குக் கடலில் இருந்து எழுகின்ற இந்த
மரணமில்லாத தீப்பறவை
வடக்குக் கூறுக்குப் பறக்கிறது
சில புனித மரங்களைத் தவிர வேறு எங்கும்
அது தங்குவதில்லை. அது எவ்வித

உணவையும் தொடுவதில்லை.
ஆனால் அது மிக அபூர்வமான
பழத்தையே உணவாக்கிக் கொள்கிறது
அது தூய்மையான நீர் ஊற்றிலிருந்து
நீரைப் பருகுகிறது.
ஒரு செத்த எலியைத் தின்று
கொண்டிருந்த ஓர் ஆந்தை
தனக்கு மேலே பறந்து செல்லும்
தீப்பறவையைப் பார்த்தவுடன்
திடுக்கிட்டுப் பயந்துபோய்
தான் தின்று கொண்டிருந்த
செத்த எலியை மிகவும்
கெட்டியாகப் பிடித்துக் கொண்டது."

இந்த அழகான உருவகச் செய்யுள், நித்யாநித்ய விவேகத்தை அழகுறக் காட்டுகிறது.

'கிழக்கே வாழும் இப்பறவை' என்னும் உருவகம், சீனாவுக்குக் கிழக்கே உள்ள பாரதத்தில் வாழும் ஆத்ம ஞானியைக் குறிக்கிறது. போதி தர்மரைப் பற்றிக் குறிப்பிடும் சீன நூல்கள் அவரை 'கிழக்கிலிருந்து வந்து கிழக்கிலேயே மறைந்த ஞானி' என்று குறிப்பிடுகின்றன. ஆத்மஞானி 'தீப் பறவை' என்று குறிப்பிடப்படுகிறார். தனது ஞானாக்கினியால் அனைத்து வாசனைகளையும் எரித்து அழிக்கும் தீப்பறவை அவர். புராணப் பறவை என்னும் சொல்லும் ஆழம் மிக்கது. கிரேக்கம் போன்ற மேற்கத்திய நாடுகள் இருந்து, தர்க்கம் விஞ்ஞானம் எழுந்தது. இந்தியரின் வளமான புராணங்கள் எழுந்தன. உலகினைக் காண இரு கண்ணோட்டங்கள் உள்ளன. ஒன்று விஞ்ஞானம் மற்றும் தர்க்கம். மற்றொன்று சமயம் மற்றும் புராணம்.

மேல்நாட்டுப் பறவை, உலகின் உலகாயத ஆராய்ச்சியில் செலுத்துகிறது. இந்தியப் பார்வை உலகைப் புராணங்கள் மூலமாக, அன்பு மூலமாகப்

பார்க்கிறது. இவற்றைக் கற்பனைக் ‘கதை’ எனச் சிலர் புறம் தள்ளலாம். ஆனால், இக்கற்பனைகள் விஞ்ஞான உண்மைகளைவிட ஆழம் மிகுந்தவை. அவை வெளி உலக நிகழ்ச்சிகள் பற்றிக் கவலைப் படுவதில்லை. இந்தியாவிற்கு மேலைநாடு போன்று தொகுக்கப்பட்ட வரலாறு இல்லாமல் இருக்கலாம். ஆனால் இவ்விடத்தை புராணங்கள், இதிகாசங்கள் நிறைவு செய்கின்றன. இராமர், கிருஷ்ணர் போன்றவர்களை சரித்திரச் சான்றுகொண்டு நிரூபிக்க முடியாமல் போகலாம். ஆனால் பாரத மக்கள் அதைக் குறித்துக் கவலைப்படுவதில்லை. நமது ஆழ்மனம் அவர்தம் உண்மையை அறிந்துள்ளது. அதுவே சக்கரத்தின் மையம். சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கிறது. அது சரித்திரம். சக்கரத்தின் மையம் நிலையானது. அதுவே புராணம். எனவே சுவாஸ்தஸு இதனைப் புராணப் பறவை எனக் கூறுகிறார். அது முதுமை அடைவதே இல்லை. பிறப்பதெல்லாம் முதுமை அடைகிறது. சரித்திரம் என்றால் பிறப்பும் இறப்பும், ஆரம்பமும் முடிவும், உள்ளவற்றைப் பற்றியே சித்தரிப்பது. பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே நிகழ்பவற்றை எடுத்துரைப்பது வரலாறு. பிறப்பின்மைக்கும் இறப்பின்மைக்கும் இடையே உள்ளது புராணம். வரலாறு காலத்துடன் மாறிக்கொண்டு இருப்பது. புராணம் காலத்தைக் கடந்தது. செய்தித்தாள் கூறும் சரித்திர நிகழ்வு போல பழையது ஆகிவிடாத ஒன்று. ராமர் செய்தித்தாளின் பகுதி அல்ல. அவர் எப்பொழுதும் நமது நிகழ்காலத்துடன் சம்பந்தப்பட்டு உள்ளவர். காலச் சக்கரமான சரித்திரம் சுழலும்போது, அதன் மையமாய் நிலைபெயராமல் நிரந்தரமாக இருக்கிறார்.

நமது உள்ளத்தில் அழியாமை உள்ளது. அது காலம் கடந்தது. உண்மையில் நம்முள்ளே காலம், அழியாமை இரண்டுமே உள்ளன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கப்போனால், நாம் பிறக்கிறோம், இறந்து

படுவோம் - இந்த மேலோட்ட சக்கரமான காலம். ஆனால் உள்ளே இப்பொழுதும் அழியாமை இருந்துகொண்ட உள்ளது. இதுவே முதுமை அடையான தீப்பறவை. பாரதத்தை உண்மையில் அறிய ஒரு தனிப்பட்ட அணுகுமுறை தேவை.

ஆத்மா அல்லது மெய்யுணர்வு உயிரின் ஆழத்தில் உள்ள புனிதத்தைத் தவிர வேறு எங்கும் நிலைபெறாது. அது ஆத்மிக உணர்வை மட்டுமே உணவாகக் கொள்கிறது. ப்ரம்ம பாவனை என்ற சுத்தமான நீருற்றியிருந்து ஞானம் என்னும் தூய நீரை மட்டுமே பருகுகிறது. இறுதியில் பரமாத்மாவுக்கே அது உணவாகிறது.

*தான் ஊண் ஆதல்காண் - உள்ளது நாற்பது, 21*

ஆசைவயப்பட்டு நாம் உலக இன்பங்களில் ருசி காண்பது, விஷத்தன்மை உடைய ஊற்றிலிருந்து நீர் பருகுவது போலாம். “அப்படிச் செய்யாதீர்கள்” என யாரேனும் அறிவுறுத்தினால், நாம் தாகத்தினால் இறந்து விடுவோம் என்று அஞ்சி, அதையே மீண்டும் செய்கிறீர்கள். தூய்மையான நீரூற்றும் அபூர்வமான பழ மரங்களும் இருப்பதை நாம் அறிவதில்லை.

உங்கள் கண்களில் ஆசை மட்டுமே இருந்தால், அவை செத்த எலிகளை மட்டுமே பார்க்கும். உயர்ந்த மரத்தில் வீற்றிருக்கும் ஆந்தை தெருவில் கிடக்கும் செத்த எலியைமட்டுமே பார்க்கும். பழத்தைப் பற்றிய அறிவு அதற்கு இல்லை. ஆசைத் திரை அதன் கண்களை மறைக்கின்றது. நம் இதயத்தில் தீப்பறவை இருந்தாலும், நாம் ஆந்தையைப் போல் நடந்து கொள்கிறோம்.

சுவாஸ்தஸூ கூறுகிறார்: “உங்களில் உள்ள தீப்பறவையின் குரலைக் கவனியுங்கள். அது மிகவும் மெல்லிய குரல். ஆந்தையின் கூக்குரலில் அதைக் கேட்க முடியவில்லை. இந்த ஆந்தையைத்

தூங்கச் செய்யவேண்டும். அப்போதுதான் நீங்கள் தீப்பறவையின் குரலைக் கவனிக்க முடியும். ஆந்தைதான் நம் மனம், நம் தன்முனைப்பு. தீப்பறவைதான் உங்கள் ஆத்மா. இது 'ப்ரக்ஞை' அல்லது சித் என்னும் வரையற்ற கிழக்குக் கடலிலிருந்து தோன்றியது. முதுமை அடையா இந்தத் தீப்பறவை அபூர்வ மரத்தில் தங்கி, அபூர்வப் பழங்களை மட்டும் சாப்பிட்டு, புனிதமான ஊற்றுநீர் மட்டுமே பருகுகிறது. ஆந்தையின் கூக்குரலில் நீங்கள் தீப்பறவையின் அழைப்பைக் கவனிக்க முடிவதில்லை. எல்லாத் தியான முயற்சியுமே ஆந்தையினை அமைதிப்படுத்தும் முயற்சியே. அப்போதுதான் நீங்கள் புனிதப் பறவையின் குரலைக் கவனிக்க முடியும்.

விஸ்வநாத ஸ்வாமியுடன் பகவானின் உரையாடலில் இந்தப் பேருண்மை புலனாகிறது. "முடிவற்றுச் சுழன்று விளாந்தொடும் எண்ணற்ற அனுபவங்களின் ஊடே ஒரு சில நிமிடங்களாவது விலகி நின்று நமது உண்மை நிலைமையை அனுபவித்துப் பார்க்கவேண்டும். வரையற்றதும் நிரஞ்சன நிர்விகாரமானதும், வர்ணனைக்கு எட்டாததும் ஆன அந்த நிலை தூய பரிபூர்ண உணர்வு மாத்ரமாக நிற்பது. உள்ளது அது ஒன்றே. புத்தரும் சங்கரரும் பகவானும் என்றென்றும் சாஸ்வதமாக அது நீயாவாய் என்று கலங்கரை விளக்கமாக ஒளி வீசுகிறார்கள். இந்த சத்ய ஸ்வரூபங்களின் நினைவு நம்மை உள்ளே இழுத்துச் சொல்லொணாச் சாந்தியில் நம்மைச் சேர்த்துவிடும்" என்கிறார் விஸ்வநாத சுவாமி.

யோக வாசிட்டம் ஓர் அத்யாயத்தில் ஜனக சித்தர்களின் சம்பாஷணைகளைக் கேட்டு முக்தி அடைந்தது விளக்கப்பட்டுள்ளது. சம்ஸ்கிருத யோக வாசிஷ்டத்தில் இவ்வுரையாடல் ஆறு சுலோகங்களில் அமைந்துள்ளது. தமிழ் மொழியாக்கமாகிய வாசிட்டத்தில் ஐந்து பாடல்கள் மட்டுமே உள்ளன.

*இதைக் கண்ணுற்ற பகவான் அந்த ஆறாவது சுலோகத்தையும் தமிழாக்கிச் சேர்த்தார். இந்த ஆறு சுலோகங்களின் பொருளை பகவான் குஞ்சு சுவாமிகட்கு விளக்கினார்:*

*1) அறிபவனும் அறிபடுபொருளும் ஐக்கியம் ஆகும்போது ஆத்மானந்தம் பிறக்கிறது. இதுவே ஆன்ம ஞானம் எனப்படுவது. இதை அடைய முயற்சி செய்ய வேண்டும்.*

*2) காண்பவன், காணப்படும் பொருள், காணும் செயல் - இம்மூன்றையும் காண்பிக்கும் (தான் எனும்) ஆத்மாவைத் தியானித்தலே வாசனைகளை ஒழிக்கும் வழி. இருப்புக்கும், இல்லாமைக்கும் ஆதாரமான ஆன்மாவைத் தியானிக்க வேண்டும்.*

*3) எல்லா உலகங்களும் எதில் நிலையாய் உள்ளதோ, அவையெல்லாம் எதனுடையதோ, எதிலிருந்து அனைத்தும் எழுகின்றனவோ, எதன் பொருட்டு எல்லாமே ஆகுமோ, எதனால் இவை எல்லாம் எழுந்து பின் எதுவாக ஆகின்றனவோ - அதுவே நித்ய வஸ்து - உள்ள பொருள். இந்த ஸ்வரூபத்தை நம் உள்ளத்தில் தியானம் செய்யவேண்டும்.*

*4) "நான்-நான்" என்று ஒளிர்ந்து விளங்கும் அந்த நித்ய பிரம்மத்தைத் தியானிக்க வேண்டும். தன் இதயத்தில் சத்வஸ்துவைத் தேடாமல் அறிவிலிகள் தமக்கு வெளியே புறஉலகில் கடவுளைத் தேடி அலைகிறார்கள். கௌஸ்துப மணியைத் தூர எறிந்துவிட்டுக் கிளிஞ்சலைத் தேடி அலைவதுபோல் அல்லவா இது உள்ளது!*

*5) ஆசை அலைகளை அறவே ஒழித்தவன் மட்டுமே நித்ய வஸ்துவை அடையமுடியும். என்றும் தீய விஷயங்கள் இன்பம் தரமாட்டா என்று அறிந்த பின்னரும் அவற்றையே பற்றிக்கொண்டு இருப்பவன்*

என்றும் பாரத்திலேயே இருப்பான். அவனைக் கழுதை என்றால் அவமானம் கழுதைக்கே!

6) தேவேந்திரன் தன் சக்தி வாய்ந்த வஜ்ராயுதத்தால் மலைகளை உடைத்தறிவது போல் நாமும் நம் சக்திவாய்ந்த பகுத்தறிவால், சீறிப் படமெடுத்து ஆடும். கொடிய புலன்களைத் தாக்கி, அழிக்க வேண்டும். இதனால் மனஅமைதி உற்று சுகமான ஆத்மாவில் அமரலாம்.

சில நாட்களுக்கு முன் பகவானின் ஜயந்தி நாளைக் கொண்டாடி மகிழ்ந்தோம். பகவான் பௌதிக தேகத்துடன் இருந்தபோது அன்பர்கள் பகவானிடம் ஆத்மா ஜோதியாகிய தாங்கள் எங்கட்கு வழிகாட்டவே பிறவி எடுத்துள்ளீர். அந்த ஜயந்தி விழாவை விமரிசையாகக் கொண்டாட அனுமதியுங்கள் என்று இறைஞ்சினார்கள். அதற்கு விடையாக பகவான் தனது புகழ்பெற்ற பாடல்களைக் கூறினார்.

“பிறந்தநாள் ஏதோ பெருவிழாச் செய்வீர்
பிறந்ததுஎவண் நாம்? என்று பேணிப் - பிறந்துஇறத்தல்
இன்று என்றும் ஒன்றாய் இலங்கு பொருளில் பிறந்த
அன்றே பிறந்த நாளாம்.

பொருள்: பிறந்த நாளைப் பெரிய விழாவாகக் கொண்டாடும் அன்பர்களே! நமது அநித்ய உடலை ‘நாம்’ என்று கருதும் ‘அஞ்ஞானம்’ எங்கிருந்து பிறந்தது என்று ஆத்மவிசாரம் செய்து பிறப்பு இறப்பினைக் கடந்த ஆத்மாவில் ஒன்றுவீர்கள்.

இதனைக் கூறிய பின்னரும் அன்பர்கள் பிடிவாதமாக இருந்தனர் போலும்! பகவானின் அடுத்த பாடல் இந்தக் கருத்தை மேலும் அழுத்தமாகக் கூறுகிறது.

பிறந்த நாளேனும் பிறப்புக்கு அழாது
பிறந்தநாள் உற்சவே பேண - இறந்த
பிணத்திற்கு அலங்கரிக்கும் பெற்பு என்றே தன்னை
உணர்ந்து ஒடுங்கல் தானே உணர்வு.

*உடலைத் தானாக எண்ணிக் கொளும் அறியாமையின் தலைமீது ஓங்கி அடிக்கும் இப்பாடலின் பொருள்:*

*"தினந்தோறும் நாம் இங்ஙனம் இவ்வுலகில் பிறப்பு எடுத்து உழல்கிறோமே என்று வருத்தப்படவேண்டும். இந்த இடையறாச் சக்கரச் சுழலை நிறுத்தவேண்டும். அப்படித் தினந்தோறும் செய்யாவிட்டாலும், குறைந்தபட்சம் பிறந்தநாள் அன்றைக்காவது ஒருவன் தான் பிறந்ததற்கு அழவேண்டும்; அப்படி இல்லாமல் பிறந்த தினத்தைக் கொண்டாடுவது செத்த பிணத்திற்கு ஆடை அலங்காரம் செய்து மகிழ்தல் போலும். இதை நன்கறிந்து உனது ஆத்மாவில் ஒடுங்கி இருப்பாய். இதுதான் நல்லறிவு.*

*எதற்கும் அஞ்சாதவரும் அஞ்சுவது சாவைக் குறித்தே. ஏனெனில் நமது உடல் நித்ய வஸ்து என்று எண்ணிக் கொள்ளும் மனிதன், அது அழியப்போகும் ஒன்று என அறிவிறுத்தினால் அஞ்சுகிறான். பகவானோ அவரே நித்ய சத்யம். ஓரன்பர் "சாவிற்குப் பின் என்ன ஆகும்?" என்று வினவியபோது "சாவைப் பற்றி ஏன் விசாரிக்கவேண்டும்? தினமும் தூக்கத்தில் என்ன நேருகிறது? தூக்கத்தில் நமது அனுபவம் என்ன? அது போன்றதே சாவும்!" என்றார் பகவான்.*

*அதே கேட்ட அன்பர், "தூக்கம் தற்காலிகமானது. சாவு அப்படியில்லையே?" என்று வினவியபோது, பகவான், "இரு விழிப்பு நிலைகட்கும் இடையே நிகழ்வது தூக்கம். அவ்வாறே இரு பிறவிகட்கும் இடையே நிகழ்வது சாவு. இரண்டும் தாற்காலிகமே. அநித்யமே. சாவைக் கண்டு அஞ்சும் தன்முனைப்பு எங்கிருந்து பிறக்கின்றது என்பதை விசாரித்து அறிந்தால் சாவற்ற நித்ய வஸ்துவை அறிவாய்" என்றார் பகவான்.*

*பகவானது ஒவ்வொரு சொல்லும் இதை உணர்த்துவதாகவே அமைந்தது. ஒருசமயம் சோமசுந்தர சுவாமி என்ற அன்பர் பகவானிடம் தன்னுடைய*

நோட்டுப் புத்தகத்தில், ஓர் அக்ஷரமாவது எழுதித் தருமாறு வேண்டினார். நமது துறவி வேந்தர் ‘அக்ஷரம்’ என்பதையே பொருளாகக் கொண்டு அழகிய கவிதையை எழுதினார். ‘அக்ஷரம்’ என்பதை சிலேடைப் பொருளில் கொண்டு ‘அக்ஷரம்’ என்பதற்கு அழிவற்றது என்பது மற்றொரு பொருள் உண்டுற எழுதிய பாடல் இதோ:

“அக்கரம் ஓர் எழுத்தாகும்; இப்புத்தகத்தோர்
அக்கரம் அஃதெழுத வாசித்தாய் - அக்கரமாம்
ஓரெழுத்து என்றும் தானாய் உள்ளத்து ஒளிர்வதாம்
ஆர்எழுத வல்லார் அதை.”

பொருள்: நீ வாசிப்பதற்காக உனது இப்புத்தகத்தில் நான் ஓர் ‘அக்ஷரம்’ எழுதித் தருகிறேன். ஆனால் இதயத்தில் எப்பொழுதும் பிரகாசிக்கும் அந்த அக்ஷரத்தை (அழியாத ஆத்மாவை) யார் எழுதிக் காட்ட முடியும்?

மற்றொரு சமயம் ஒரு குஜராத்தி அன்பர் ஒரு நூலில் பகவானின் பெயரை எழுதித் தருமாறு கேட்டதற்கு, “எனக்குப் பெயர் என்பதே இல்லையே!” என்றார். உங்கள் பெயர் ரமண மஹரிஷி அல்லவா என்று அவர் வியப்புடன் கேட்டபோது, “யாரோ அப்படிச் சொன்னார்கள். அவ்வளவுதான். எனக்கேது பெயர்?” என்றார் பகவான். நாமம், ரூபம், காலம் அனைத்தையும் கடந்தவர் பகவான். மணிவாசகர் கூறியதுபோல், “ஏது அவன் ஊர்? ஏது அவன் பெயர்? ஏது அவனைப் பாடும் பரிசு?” அனைத்தையும் கடந்த பரப்பிரம்மம் பகவான்.

பற்றுக்களையும் ஆசைகளையும் உதறித்தள்ளி, இதயத்துள் எவ்வளவு ஆழ்கின்றார்களோ, அவ்வளவுக்கு பேரானந்தத்தை சாதகர்கள் அனுபவிப்பர். இதயத்தில் முற்றிலும் ஆழ்ந்து தன்முனைப்பே முற்றிலும் கரைந்து நீங்கும்போத அவர்கள் ஜீவபோதம் முற்றிலும் அழிந்து, எல்லையில்லா ஆனந்தத்தை அனுபவிப்பர்.

*எவ்வளவிற்று ஆக இதயத்தே ஆழ்வார்மற்று*
*அவ்வளவிற்று ஆக அனுபவிப்பார் - செவ்வி*
*விரூபமா நின்று விளங்கும் அகண்டான்ம*
*சொரூபமாத் துன்னு சுகம்.*

*- (குருவாசகக் கோவை, 451)*

மீண்டும் பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார்.

“உண்மையான இன்பம்தான் ஆன்ம ஸ்வரூபம். அது ஒன்றே. அதைத் தவிர வேறு சுகமே உலகில் கிடையாது. இந்த உண்மையை வலிமையுடன் உணர்ந்து இந்த நானே ஆன்மா என்பதை அறிந்து, ஒரு நொடியும் அந்நிலையில் இருந்து விலகாது ஆன்ம ஆனந்தத்தை அனுபவிப்பாயாக.

பாடல்:

*சுகம்என்பது ஆன்ம சொரூபமே; ஆன்ற*
*சுகம்அன்றி இல்லை சொரூபம் - சுகம்என்பது*
*ஒன்றே உளது; அவ்வுறுதி உணர்ந்து ஆன்மநிலை*
*நின்றேதுய்; இன்ப நெடிது.*

*- (குருவாசகக் கோவை, 1029)*

பரமஹம்ஸ யோகாநந்தரின் சுடரான சி.ஆர். ரைட் ஒரு வினா எழுப்பினார். “அத்தகு எல்லை இல்லா ஆனந்த நிலையை எவ்வாறு அடைவது?” பகவான் அளித்த தெளிவான விடை:

“ஆனந்தம் இப்பொழுதல்லாது இனி அடையப் போவதில்லை. நம் சொரூபமே ஆனந்தம். இதை உணராததால் மனதில் குறை உணர்ச்சி உண்டாகிறது. இதுவே எப்படி ஆனந்தத்தை அடைவது என்ற கேள்வியை எழுப்புகிறது. இங்ஙனம் யாருக்குக் குறை எழுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். தூக்கத்தில் ஆனந்தமாக இருக்கிறோம். எழுந்தவுடன் அவ்வாறு இல்லையே? ஏன்? எழுந்த இடைவெளியில் ‘நான்’ என்கிற போலித் தோற்றத்தின் எழுச்சியே அந்த

*ஆழ்ந்த ஸ்வரூபத்தை மறைக்கிறது. அத்தடை நீங்க, அவ்வகந்தையின் மூலம் எது என்று நாடவேண்டும். அந்நாட்டத்தால் அகந்தை தன் மூலத்தில் மறைய, தனது ஸ்வரூபமான எல்லையற்ற ஆனந்தம் தடையற்று ஒளிர்கிறது. சந்தேகப் பூட்டுகள் அனைத்தையும் திறக்கும் அற்புதச் சாவி இந்த உள்முக நாட்டமே. அதுவே எல்லையற்ற ஆனந்தத்தின் திறவுகோல்*

*- (திருவருண்மொழி, 106)*

உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்.

## ‘ரமணோதயம்’ – தொடரும் நன்கொடையாளர்கள்

*நங்கநல்லூர் திரு. எஸ். இராமமூர்த்தி ரூ.2000*

*பொள்ளாச்சி, வழக்கறிஞர், திரு. B.செல்வகுமார் 500*

*வேளச்சேரி, திரு. வி.என். விஸ்வநாதன் 500*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2019

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *ஜனவரி* | 20 | *ஞாயிறு* | *மதியம்* 1.17 | 21 | *திங்கள்* | *காலை* 11.08 |
| *பிப்ரவரி* | 18 | *திங்கள்* | *இரவு* 11.53 | 19 | *செவ்வாய்* | *இரவு* 09.32 |
| *மார்ச்* | 20 | *புதன்* | *காலை* 9.45 | 21 | *வியாழன்* | *காலை* 7.28 |
| *ஏப்ரல்* | 18 | *வியாழன்* | *இரவு* 07.05 | 19 | *வெள்ளி* | *மாலை* 05.35 |
| *மே* | 17 | *வெள்ளி* | *அதிகாலை* 04.32 | 18 | *சனி* | *அதிகாலை* 03.40 |
| *ஜூன்* | 16 | *ஞாயிறு* | *அதிகாலை* 03.10 | 17 | *திங்கள்* | *அதிகாலை* 03.00 |

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## 10. நீருடன் கலந்த சந்தனம்

*சந்தனம் அரைக்கப்படும் போது அது கரைந்து நீருடன் கலந்து சிறந்த நறுமணத்தைத் தருகிறது. அதுபோலவே வெளி விஷயங்களின் மீதுள்ள ஆசை கரையும்போது, தெய்வீகக் காதல் வெளிப்பட்டு ஒளிர்கிறது.*

*- 'விவேக சூடாமணி'யில் சங்கரர்*

இன்று நான் தியானம் செய்து கொண்டு இருந்தபோது 2000 ஆண்டுகளில் இந்தியாவில் உதித்த மாபெரும் தத்துவ ஞானியாகிய சங்கரரின் இந்த சுலோகம் என் உள்ளத்தில் முகிழ்ந்தது.

இப்போதெல்லாம் எனது ப்ரக்ஞை உணர்வில் நிகழும் மாற்றங்கள் மிக வேகமாக நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. அவை மாறும் வேகத்தில் அவற்றை என்னால் கவனித்துப் பார்க்கக்கூட இயலவில்லை. அவற்றில் மிக முக்கியமான சிலவற்றை மட்டும் அவை நிகழும் வேகத்திலேயே நான் குறித்துக் கொண்டேன். அவற்றுள் மிக முக்கியமான இது: என்னால் நாள்முழுதும் தியானத்தில் மூழ்கி இருப்பது என்பது உண்மைதான். ஆயினும், பகவானின் வார்த்தைகளைக் கேட்கும்போதோ, அவரது உரைகளைப் படிக்கும் போதோ, அல்லது எந்த ஓர் ஆன்மிக ஆசான்களின் வார்த்தைகளைக் கேட்கும்போதோகூட நான் தன் முயற்சியே இல்லாமலேயே என்னால் அந்தப் பேரமைதிக்குத் திரும்ப முடிந்தது. இப்போது இது சில சமயங்கள் மட்டும் நிகழ்ந்தாலும் வெகு விரைவில் நான் விரும்பும்போதெல்லாம் இந்த நிலையை எய்த முடியும் என்பதை என் உள்மனம் அறியும். இந்த ஆன்மிக

பாதை ஒருமுறை திறந்து விட்டால், அதை மீண்டும் மறக்கவோ, நீங்கவோ இயலாது. பகவானின் திவ்ய சந்நிதியில் மனது அமைதியிலேயே ஆழ்ந்துள்ளது. இதுகாறும் செய்து வந்த இடையறாத ஐயங்களில் இனிமேல் ஒருகாலும் மனது அறுபடாது.

இந்தக் குருட்டுத்தனமான அஹங்காரம் அதனை வெற்றிகண்டு, அதன் மூலத்தை அறியும் சத்குருவின் முன்னிலையில் தனது சக்தி அனைத்தும் அழிந்து ஒடுங்குகிறது. பகவான் கூறுவதாவது: மனம் என்பது எண்ணங்களின் தொகுதியே. எண்ணுவதை நிறுத்துங்கள், பின்னர் மனம் எங்கே இருக்கின்றது என்பதை எனக்குக் காட்டுங்கள்.

நாம் எதனை மனம் என்று கூறுகிறோமோ அதிலிருந்து எண்ணங்கள் அனைத்தையும் களைந்த பின்னர் எதுவுமே மீதி இல்லை என்பதை அனுபவம் காட்டுகிறது. ஆனால், பெரும்பாலான மக்கள் எண்ணுவதுபோல, வாழ்க்கை அத்துடன் முற்றுப் பெறுவதில்லை. அது தன்னை மேலும் வலிமையுடனும், சக்தியுடனும் மிக நுண்மையுடனும் வெளிப்படுத்திக் கொள்கிறது. முன்பெல்லாம் எண்ணங்கள் இல்லாமல் ஒருவராலும் இருக்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருந்ததை நினைவுபடுத்திக் கொள்வேன். பகவான் கூறுகிறார்: மனதை மேம்படுத்த மிக முக்கியமான வழி எண்ணுவதை நிறுத்துவதுதான். இடைவிடாத எண்ணங்கள் மூளையைச் சூடாக்குகின்றன

அவ்வாறெனில், ஏன் நம்மால் மனதைக் கட்டுப்படுத்த முடிவதில்லை? உண்மை என்னவெனில், ஆத்மிகப் பயிற்சி இல்லாத மக்கள், எண்ணுவதிலேயே அதைக் காண்கின்றனர். அதை விடுத்து அவர்களால் செல்ல இயலவில்லை.

பகவான் கூறும் விசார மார்க்கத்தை இடைவிடாது பயிலும்போது, 'நான் யார்' என்று தேடும்போது போராடும் மனம் அமைதி அடைகின்றது.

இதுவரை யாருமே எண்ணங்களின் மூலமாக சத்யத்தைக் கண்டதில்லை. சலிக்கின்ற மனதின் மூலமாக யாருமே ஆத்ம தரிசனம் பெற முடியாது என்ற ஆதர்ச உண்மையினை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இடைவிடாத எண்ணங்களில் நாம் காணும் சுவையை அடியோடு நீக்க வேண்டும். இங்ஙனம் எண்ணுவதில் உள்ள சேவை நீங்கும்போது நாம் பேருண்மையை நாடுகிறோம்.

எவ்வளவுக்கு எவ்வளவு நாம் மன ஓட்டத்தில் இருந்து விரட்டுகிறோமோ, நாம் கட்டளையிடும்போது எங்ஙனம் மனதில் ஆழ் மனதில் ஆழ்த்துகிறோமோ அந்த அளவுக்கு மனம் நமக்குக் கீழ்ப்படியும் ஊழியன் என்ற நிலையை அடைந்து, நமக்குத் தேவையான வழியில் அது நமக்குப் பணி செய்ய இயலும். பல அறிவு குறைந்த மக்கள் மனதினைக் கடந்து செல்லல் அல்லது மனத்தினை அழித்தல் போன்ற வாசகங்களைக் கேட்கும்போது அச்செயல், ஒருவனை ஒரு சாமான்யமான கார்யத்தைக்கூட செய்ய இயலாத ஒரு முட்டாள் போல் ஆக்கிவிடும். அவன் பௌதிக உலகில் சரியாகச் செய்ய இயலாது என்று தவறாக எண்ணி விடுகின்றதை அவர்கட்குக் கூறுங்கள். மனம் ஒரு நல்ல ஊழியன், ஆனால் அது ஒரு மோசமான எஜமானன்.

மனத்தின் வரம்புகளைக் கடந்து செல்லுதலால், ஏதாவது ப்ரக்ஞை உணர்வை அப்பாலுக்கு அப்பாலாய் உள்ள ஆத்மிக நிலைக்கு மாற்றி விடுவது என்பது. இது எல்லாருக்கும் முடியாமல் போகலாம். அந்த நிலையைப் பற்றி பலரும் கேட்டிருக்கலாம. அதற்கான வழிமுறைகளையும் அறிந்திருக்கலாம். ஆனால் அவர்கட்கு அது சரியாகப் புரிந்திருக்காது. அதை எப்படிச் செய்வது என்ற வழிமுறைகள் அவர்கட்கு புரிபட்டிருக்கிறது. நாம் ‘அறிஞர்’ என்று மதிப்பிடும் பலர், இதனை அணுவளவும் புரிந்து கொள்ள இயலாது.

விழிப்பதையும் கண்டிருக்கிறேன். அவர்கட்கு பிரச்சனையின் தீர்வு என்ன என்பது தெரியாமல் இருக்கலாம். ஏன், பலருக்கு பிரச்சினை என்ன என்பதே தெரியாமல் போகலாம். புற ஊதாக் கதிர்கள் என்று பௌதிக சாஸ்திரம் கூறுவதை நாம் காண இயலாது இல்லை அல்லவா? இதுவும் அது போன்றதே. அவர்களை வாழ்க்கை முழுவதையும் அவர்கள் பௌதிக அறிவை அடைவதிலேயே கழித்துள்ளார்கள். அவர்தம் வாழ்வின் குறிக்கோள் முழுதுமே அதிலேயே அடங்கிவிட்டது. அதையும் தாண்டிய ஆத்மிக நிலை ஒன்று உள்ளது என்பதை அவர்கள் அறிவதே இல்லை. இந்த நூல் அவர்கள் போன்றவர்கட்காக எழுதப் பெறவில்லை.

★★★ ★★★

ஒரு முதிய அந்தணர் என்னருகில் அமர்ந்து காயத்ரி ஜபம் செய்து கொண்டு இருந்தார்.

இது அவர் தினமும் ஜபிக்கும் மந்திரம் ஆகும். அதனை உள்ளிருந்து நானும் ஜபிக்கத் தொடங்கினேன்.

இந்த பிரபஞ்சத்தைப் படைத்த அந்தப் பரம் பொருளின் பேரொளி குறித்து நாம் தியானிப்போமாக. அது நம் இதயங்களை ஒளியூட்டட்டும்.

**ரமணோதயம்**

Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |

# குரு வகுத்த பாதையில் பிறழாமல் செல்க

## வே. கணேசன்

*[ஒரு சத்குருவுக்கும் தக்க சீடனுக்கும் இடையே நிகழும் முதல் சந்திப்பின் எடுத்துக்காட்டு அஷ்டாவக்ரனுக்கும் ஜனகனுக்கும் இடையே நிகழ்ந்த ஆன்மிகத் தொடர்பு. பகவான் ரமணர் இதுகுறித்து தனது அணுக்கச் சீடர் ஒருவருக்குக் கூறியதை அவர் எனக்கு எடுத்துரைத்ததன் வடிவம் இது.]*

அஷ்டாவக்ரன் தன் உடலில் எட்டுக் கோணல்களுடன் பிறந்தான். அவனது தோற்றமே காண்பாருக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அவனது விளையாட்டுத் தோழர்கள் "எங்கட்கெல்லாம் தந்தை உள்ளார். நீ தந்தையை இழந்தவன்!" என்று பரிகாசம் செய்தனர். அஷ்டாவக்ரன் தன் அன்னையிடம் சென்று "என் தந்தை எங்கே?" என்று கேட்டான். சில ஆண்டுகள் வரை, "உன் தந்தை வெளிதேசம் சென்று இருக்கிறார்" என்று கூறி வந்த அன்னை, இறுதியாக, "உன் தந்தை சிறைச்சாலையில் உள்ளார்" என்று உண்மையைக் கூறிவிட்டாள். அதன்பின் வார்த்தைகள் வராது, அழத் தொடங்கினாள். அதற்குமேல் அன்னையைக் கேள்வி மூலம் தொல்லைப் படுத்த விரும்பாத அஷ்டாவக்ரன் அந்த ஊரில் இருந்த முதியவரை அணுகி, இதே கேள்வியைக் கேட்டான். அவர் "இந்நாட்டின் வேந்தன், ஜனகர், தன் கேள்விக்கு விடை அளிக்காத அனைவரையும், உன் தந்தை உட்பட, சிறைச்சாலையில் அடைத்து விட்டார்" என்று பதிலிறுத்தார். உடனே அஷ்டாவக்ரன் அன்னையிடம் ஓடிச் சென்று, அவள் கண்ணீரைத் துடைத்து, "அம்மா, நான் இப்போதே ஜனகர் அரண்மனைக்குச் சென்று விடுதலை பெற்ற

*தந்தையுடன் திரும்புவேன்" என்று கூறினான். அங்ஙனம் சூளுரைத்த அந்தச் சிறுவனுக்கு பத்து வயதுகூட நிரம்பி இருக்கவில்லை.*

*அஷ்டாவக்ரன் அரசவைக்குள் நுழைந்தபோது, ஜனக மன்னர், மக்கள் பிரச்சனைகளைத் தீர்க்கும் வழியை ஆய்ந்து கொண்டு இருந்தார். உள்ளே நுழைந்த அந்த எட்டுக் கோணல் சிறுவனைக் கண்டு ஜனகர் தவிர மற்ற அனைவரும் சிரித்தனர். அரசனை நோக்கிய சிறுவன், மிகத் துணிவுடன், "அரசே, உங்கள் ஐயங்களைத் தீர்க்க வந்துள்ளேன். உங்கள் கேள்வி என்ன?" என்று கேட்டான். அரசன், கண்டிப்புடன் அதேசமயம் அனுதாபத்துடனும் கூறினார்: "சிறுவனே, என் கேள்வி ஒரு தீவிரமான நிபந்தனையுடன் கூடியது. அதற்கு பதிலளிக்க இயலாதவர்கள் சிறையில் தள்ளப்படுவர். எனவே, வேறு எதனையேனும் வேண்டுக. நான் மகிழ்ச்சியுடன் தருவேன்." சிறுவன் அதே உறுதியுடன் கூறினான்: "இந்த நிபந்தனைகள் தன் ஞானத்தில் நம்பிக்கை இல்லாதவர்களைத்தான் அச்சுறுத்தும். உங்கள் ஐயம் என்னவென்று கூறுங்கள். அதை நிச்சயம் உடனே தீர்த்து வைப்பேன்." சிறுவன் பேசிய அவ்வுறுதி மிக்க வார்த்தைகள் ஒரு கட்டளை போல் ஒலித்தன. ஜனகர் எதையும் கூறுதற்கு முன்பே அதுவரை அரசன் முன்னே நின்று கொண்டு இருந்த அஷ்டாவக்ரன் கூறினான், "அரசே! தற்போது எனக்கும் உங்களுக்கும் உள்ள உறவு எத்தகையது!"*

*அரசன் பதிலிறுத்தார்: "நீ எனது ஆசிரியன் நிலையில் உள்ளாய். நான் உனது விடையைக் கேட்க ஆயத்தமாக உள்ளேன்." சிறுவன் கேட்டான், "அப்படியென்றால் என்ன பொருள்?" அரசன், "நீங்கள் எனது ஆசான்; நான் உனது மாணவன்." சிறுவன் கூறினான், "நீங்கள் அதை வாய் வார்த்தையாகக் கூறுகிறீர்களே தவிர செயலில் காட்டவில்லையே!"*

இந்தச் சொற்களின் ஆழம் அரசனை நேரடியாகத் தாக்கியது. அவர் சிம்மாசனத்திலிருந்து இறங்கி சிறுவனைப் பணிவுடன் அந்த அரியணையில் அமர வைத்தார். கீழே இறங்கி, பணிவுடன் சிறுவன்முன் கைகட்டி நின்றார்.

அஷ்டாவக்ரன் வினவினான்: "அரசே! உனது குருதட்சணை எங்கே?" அரசன் பணிந்து அஷ்டாவக்ரன் பாதங்களை வணங்கி, "எனது ராஜ்ஜியம் முழுவதையும் உங்களுக்கு தட்சணையாக அர்ப்பணிக்கிறேன். இந்த விநாடிமுதல் எனக்குச் சொந்தமான அனைத்துமே உங்களுக்குச் சொந்தம்" இங்ஙனம் கூறிப் பணிந்த அரசர், ஒரு பணியாளன் எஜமானது கட்டளைக்குக் காத்திருப்பதுபோல் கைகட்டிக் காத்திருந்தார்.

"அரசே! நம் இருவருடைய, இப்போதுள்ள நிலையாது?" என்று வினவிய அஷ்டாவக்ரனுக்கு "நீங்கள்தான் சக்ரவர்த்தி, நான் குடிமகன். நீங்கள் ஆசான், நான் சீடன்" என்று விடையிறுத்தார் அரசன்.

வேத வேதாந்தம் அனைத்திலும் கரைகண்ட ஜனகரே! உங்கள் ஐயம் என்னவென்று இப்போது கூறுங்கள் என்றான் அஷ்டாவக்ரன்.

ஜனகர் கூறினார், "உபநிஷத்தில் ஒரு வாக்யம் உள்ளது. குதிரையின்மேல் ஏற யத்தனிக்கும் ஒருவன் ஓர் அங்கவடியிலிருந்து இன்னொரு அங்கவடியில் கால் வைக்கத் தேவையான மிகச் சிறிய நேரத்தில் ஆத்ம ஞானத்தை அடைய முடியும். அது அவ்வளவு எளிதானது என்று கூறப்படுகிறது. இந்த வேதாந்த உண்மையை நான் நிரூபிக்க வேண்டுகிறேன். இங்கு வந்திருந்த பல்வேறு நூலறிவாளர்கள் இதனை எனக்கு அறிவுபூர்வமாக நிரூபிக்க முயன்றனர். ஆயினும் நான் அவர்களது வியாக்யானங்களில் திருப்தி அடையவில்லை. எனவே இந்த வேதாந்த வாக்யம்

மெய்யானதா என்ற எனது ஐயம் தீர்க்கப்படாமலேயே உள்ளது. இதனை உங்களால் விளக்க முடியுமா?"

அஷ்டாவக்ரன் ஒரு குதிரையைக் கொண்டு வரச் சொன்னான், "ஜனகரே! என்னை இக் குதிரையின் மீது ஏற்றி அமர்த்தி, நீங்கள்கூட நடந்து வாருங்கள். உங்கள் ஐயங்களை யாரும் அருகில் இல்லாத அந்தரங்கச் சூழ்நிலையில் நான் தீர்த்து வைக்கிறேன்." அங்ஙனமே அஷ்டாவக்ரனை குதிரைமீது அமர்த்தி, அரசன் உடன் நடந்து சென்றார். ஒரு தனிமையான இடத்தில் குதிரையை நிறுத்தி, குதிரையின்மேல் இருந்த சிறுவன் ஜனகரைக் கேட்டான், "ஜனகரே! நம் இருவருக்கும் இடையே இப்போது உள்ள உறவு யாது?" ஜனகர் கூறினார், "பிரபு! நான் உங்கள் சீடன், உங்கள் அடிமை!"

"இப்போது என்னைக் கீழே இறக்கிவிடு!" கீழே இறக்கப்பட்ட அஷ்டாவக்ரன் கூறினார், "ஜனகரே, இப்போது உங்களது இடது பாதத்தை இடது அங்கவடிமீது வையுங்கள்" ஜனகர் அவ்வாறே செய்தார். "இப்போது உங்கள் வலது காலைத் தூக்கி அடுத்த அங்கவடிமீது வையுங்கள்" என்றார் அஷ்டாவக்ரன். ஜனகர் ஒருகாலைத் தூக்கி, அங்கவடியை அடைய பாதி முயற்சியில் இருக்கும்போது அஷ்டாவக்ரன், "ஜனகா! நிறுத்துவாய்! எந்த நிலையில் உள்ளாயோ அப்படியே இரு" என்று ஆணையிட்டார். ஜனகர் அதேநிலையில் உறைந்து போனார். அவரது இடதுகை குதிரையின் முதுகிலும், இடது பாதம் இடது அங்கவடியிலும் வலது கால் மேல் தூக்கிய நிலையிலும் இருந்தது. அஷ்டாவக்ரர் அவ்விடத்தை விட்டு நீங்கிச் சென்றார். வலது கால் மேல் தூக்கிய நிலையில் மூன்று நாட்கள் அப்படியே உறைந்து நின்றார். அவரது தேகம் பிரக்ஞை அடியோடு நீங்கி விட்டது. அப்போது திருப்பி வந்த அஷ்டாவக்ரர், "ஜனகரே! உனது வலது பாதத்தை வலது அங்கவடியின்மேல் வைப்பாய்!" என்றார். அந்தக் கட்டளை செவியில் விழுந்த மாத்திரத்தில்



ஜனகர் ப்ரக்ஞையுற்று அங்ஙனமே செய்தார். ஆனால் அந்த சிறிய இடைவேளையில் அவர் ஆத்ம ஞானத்தைப் பூரணமாக அனுபவித்தார். தன் ஆத்மாவில் முழுமையாக கரைந்தார். ஆத்மானுபவம் பெற்ற அரசர், அஷ்டாவக்ரரின் திருவடிகளில் வீழ்ந்தார்.

அஷ்டாவக்ரர் கூறினார், "அரசே! நாம் திரும்பிச் செல்லலாம். நீங்கள் எப்போதும் சக்ரவர்த்திதான். நான் எப்போதும் துறவிதான். ஆயினும், துறவி-அரசன் என்ற இருவேறு வியக்திகள் இல்லை. உண்மையில் இருப்பது அந்தப் பரவஸ்துவாகிய ஆத்மா ஒன்றுதான். இப்போது நீ மெய்ஞானத்தை உணர்ந்து விட்டாய். என்னுடைய தந்தையையும் மற்ற அறிஞர்களையும் சிறையில் இருந்து விடுவிப்பாய். தத்துவ நூல்கள் முற்றிலும் மெய்யானவையே. ஆயினும் அநுபவத்தில் வராதவரை அவை வெறும் சொற்களே! அவற்றின் மெய்மையை அனுபவிக்க குருவருள் அத்தியாவசியம். குருவருள் பெற, சீடன் தன்னுடைய அனைத்தையும் 'சரணாகதி', செயல் உட்பட எல்லாவற்றையும் குருவுக்கே அர்ப்பணிக்க வேண்டும். குருவே அனைத்தும். அங்ஙனமே பூர்ண சரணாகதி செய்த சீடனை தனது

ஒப்புயர்வற்ற ஆன்ம நிலைக்கு, பரமாத்மாவுடன் ஒன்றாகும் அந்த நிலைக்கு உயர்த்துவார். அரசனே! நீ ஆசிர்வதிக்கப்பட்டாய். பேரரசே! இந்த ஆன்மிக ஒருமை நிலையிலேயே எப்போதும் இருந்து இந்த மாநிலத்தை ஆள்வாய்" என ஆசிர்வதித்தார். அஷ்டாவக்ரர்.

பகவான் ரமணரே இத்தகைய சத்குரு. அஷ்டாவக்ரர் கூறுவதுபோல பகவானும் கூறுகிறார்: "கடவுளும் குருவும் வேறு வேறு அல்லர். குருவருள் பெற்ற ஒருவன் சந்தேகத்துக்கு இடமின்றி பிறவிச்சுழலில் இருந்து காப்பாற்றப்படுவான். புலிவாயில் விழுந்த இரை தப்பாததுபோல அத்தகைய சீடனும் என்றுமே சாமான்ய உலகிற்குத் திரும்ப முடியாது. ஆயினும் இந்நிலையை அடைய சீடன் சத்குரு காட்டுகின்ற நெறியை தவறாமல் பின்பற்ற வேண்டும்."

குருவின் உபதேசங்கள் அப்போதைக்குக் காதில் வாங்கி பின்னர் மறந்து விடக் கூடியவை அல்ல. சத்குரு கூறும் ஒவ்வொரு சொல்லையும் சீடன் தன் வாழ்வில் தவறாது பின்பற்றி வாழ வேண்டும். அப்போது அவனது அஹங்காரம் முழுதும் சத்குருவால் கபளீகரம் செய்யப்படும். அஹங்காரத்துக்கு ஒரு அங்குல இடம் கொடுத்தாலும், அது உன்னை முழுவதுமாக நாசம் செய்துவிடும். அதனை சத்குருவாகிய புலிவாயில் சிக்க வைத்துவிடு. அது உடனே அழிந்துவிடும்.

பகவானின் மிகச் சீரிய பக்தரான அண்ணாமலை சுவாமி பகவான் உபதேசத்தையே இடைவிடாது பின்பற்றி வாழ்ந்தவர். அவர் தனது இந்த அனுபவத்தை எனக்குக் கூறினார்.

திருவண்ணாமலை நகராட்சி முதன்முறையாக ஆச்ரமத்திற்குத் தண்ணீர் வர, நகரின் பிரதான தண்ணீர் குழாயில் இருந்து, கிளைக் குழாயை அமைக்க அனுமதி தந்தது. அந்தக் குழாயை உணவுக்கூடம் அருகே வரும்படி

அமைத்தால், உணவருந்திவரும் பக்தர்கள் கை, கால் அலம்புவதற்கு சௌகர்யமாய் இருக்கும் என எண்ணினார். அவர் பகவானை அணுகி, எந்த இடத்தில் இந்தக் குழாயை அமைக்கலாம் என்று அறிவுரை கேட்டார். பகவான் தனது வழக்கமான நடைப் பயிற்சிக்கு வெளியே வந்தவுடன், அண்ணாமலை சுவாமியை அழைத்து, தனது கைத்தடியால் தரையில் ஒது சதுரம் வரைந்து, “குழாயை இங்கே அமைக்கலாம்” என்று கூறினார். அன்று முழுவதும் பணியாளர்களுடன் இணைந்து பகவான் சுட்டிக் காட்டிய இடத்தில் குழாயை அமைக்க அண்ணாமலை சுவாமி செயல்பட்டுக் கொண்டிருந்தார். தோண்டியபின் அங்கே ஓர் கற்பாறையைக் கண்டனர். அதைத் தூக்கியபோது அதன் கீழே எறும்புகளின் பெருங்கூட்டத்தைக் கண்டனர். மேலும் தோண்டினால், எறும்புக் கூட்டம் முற்றிலுமாக அழிபடும். இது ஒரு குரூரமான செயல் என்று அண்ணாமலை சுவாமி கருதினார். அதேசமயம், இந்த இடத்தில்தான் குழாய் அமைக்க வேண்டும் என்று பகவான் சுட்டிக் காட்டி உள்ளாரே! இதை எப்படி மீற முடியும்? வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல், அண்ணாமலை சுவாமி பகவான் எதிரில் போய் நின்றார். இந்தப் பிரச்சனையை அவர் பகவானுக்கு எடுத்துரைத்தபோது, பகவான் மிக்க கண்டிப்புடன் அவரை நோக்கி, “நான் குழாயை அங்குதானே வைக்கச் சொன்னேன்” என்று கூறினார். “இதற்குமேல் எதுவும் சொல்லத் தேவையில்லை” என்பதுபோல் தனது முகத்தையும் வேறுபுறம் திரும்பிக் கொண்டார். அண்ணாமலை சுவாமி பகவான் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்தார். குருவின் வார்த்தைகளை எந்தவிதமான தயக்கமும் இன்றிப் பின்பற்ற வேண்டும். நமது மனது கூறும் அறிவுரைகளை ஒதுக்கித் தள்ளினால் மட்டுமே இது முடியும்.

இந்த நிகழ்ச்சியைக் கூறி முடித்தவுடன் அண்ணாமலை சுவாமி என்னை நோக்கி முறுவலித்து,

"இப்போது, இன்னொரு நிகழ்ச்சியைக் கேளுங்கள். இது பகவானைப் பற்றியதல்ல; வேறொரு மஹானைப் பற்றியது" என்று கூறினார்.

ஆசார்ய ராமானுஜர் தன் சீடர்களுடன் திருமலை சென்று அங்கு ஆனந்தமான ஆத்மானுபவத்தில் பல மாதங்கள் திளைத்து வந்தார். ஸ்ரீரங்கம் திரும்பும் நாள் நெருங்கியது. சீடர்கள் வழிப் பயணத்திற்காக உணவு மூட்டைகளை ஆயத்தம் செய்தனர். வெகுதூரம் வழிப் பயணம் செய்த பின் அவர்கள் ஒரு ஆற்றுப் படுக்கையில் தங்கினர். மிகத் தூரம் நடந்து வந்ததால் அனைவருக்கும் மிக்க பசி. உணவு மூட்டைக்குள் இருந்த ஒரு இனிப்புப் பதார்த்த பொட்டலத்தை அவர்கள் திறந்தபோது, அதற்குள் ஏராளமான எறும்புகள் மொய்த்துக் கொண்டு இருப்பதைக் கண்டனர். என்ன செய்வது என்று அறியாமல் அவர்கள் ராமானுஜரிடம் சென்று கேட்டனர். ராமானுஜர் அந்த எறும்புகளிடம் சென்று அவைகளை வணங்கி, 'திருமலை போன்ற உயர்ந்த திவ்ய க்ஷேத்திரத்தில் இருந்து உங்களை இவ்வளவு தூரம் கொண்டு வந்ததற்கு உங்கள் மன்னிப்பை வேண்டுகிறேன்' என்று பணிவுடன் கூறினார். பின்னர், சிஷ்யர்களை நோக்கி, "நாம் மீண்டும் திருமலை திரும்பிச் சென்று நமது மரியாதைக்குரிய இந்த எறும்பு அதிதிகளை அங்கேயே விட்டு விட்டு வரப்போகிறோம். இறைவன் சந்நிதானத்தில் இதுகாறும் வீற்றிருந்த நமது சிறிய நண்பர்களை இங்கே கொண்டுவர நமக்கு உரிமையில்லை. எனவே, மீண்டும் திருமலை சென்று அவர்களை அங்கே சகல மரியாதைகளுடன் விட்டு வரலாம்" என்றார். இதைக்கேட்டவுடன் சீடர்களின் சோர்வு முழுவதும் மறைந்துபோய் அவர்கள் உற்சாகத்துடன் மீண்டும் திருமலை நோக்கி நடக்கலாயினர்.

அண்ணாமலை சுவாமி என்னிடம் கேட்டார், "எப்படி உணவே இல்லாமல் சோர்வடைந்திருந்த அவர்களால்

*இந்த அருஞ்செயலைச் செய்ய முடிந்தது?" அவரே அதற்குப் பதில் கூறினார், "அதுதான் குருபக்தியின் மாபெரும் சக்தி. எறும்புகளை அழிப்பதோ அல்லது பல மைல்கள் கடந்து அவர்தம் மூலஸ்தானத்தில் வைப்பதோ முக்கியமல்ல. முக்கியமானது என்னவென்றால், குருவின் வார்த்தைகளை அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதே. குருவின் ஆணையே அனைத்திலும் உயர்ந்தது. அதனைக் கேள்வி கேட்காமல் பின்பற்ற வேண்டும்."*

*'நான் யார்?' என்னும் மந்திரத்தின் மூலம் நமக்கு பகவான் அளிக்கும் உபதேசம் என்ன! அவர் காட்டும் வழியாது?*

*மீண்டும் ஒரு நிகழ்ச்சியைக் காணலாமா! ரோடா மிஸ்திரி கூறுகிறார்: ஸ்ரீபகவானே எனது வழிகாட்டி. எனது சத்குரு. அவரே எனக்கு அனைத்தும். எனினும் சமயக் கிரமங்களை சார்ந்துள்ள எனது மனம், ஒரு ஒளிந்திருக்கும் ஆசையைக் கொண்டுள்ளது. சம்பிரதாயபூர்வமான ஒரு உண்மையான சீடன், தனது சிரத்தை சத்குருவின் திருவடிகளில் வைத்து வணங்க வேண்டும் என்று கூறுகிறது. ஏறத்தாழ ஓர் ஆண்டு காலம் இங்ஙனம் எனது தலையை பகவானின் திருவடிகளில் வைக்கும் வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். பகவானது சரீரத்தைத் தொடவே கூடாது என்பது ஆச்ரம விதி. எனினும் என்றேனும் இந்த ஆசையைப் பூர்த்தி செய்யக் காத்திருந்தேன். யாருக்கும் தெரியாமல் பகவான் பாதத்தில் சிரம்பதிக்கக் காத்திருந்தேன். ஒருநாள் பகவான் உணவுக் கூடத்திலிருந்தார். வேறுயாரும் அவருடன் இல்லை. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க அவரது பாதங்களில் தலையை வைத்து வணங்க முயன்றேன். பகவான் என்னை நோக்கித் திரும்பி, "என்ன செய்கிறாய்?" என்று வினவினார். நான் என் வாழ்நாளின் குறிக்கோளான அவர் பாதத்தில் சிரம் பதிக்க வேண்டும் என்பதைக் கூறினேன். இதனைச் செவிமடுத்த பகவான்*

உணர்ச்சிப் பிழம்பாய் ஒளிர்ந்தார். பின்னர் முகத்தில் முறுவலுடன் கூறினார், "ரோடா! இந்த பௌதிக உறுப்பாகிய கால்கள்தான் பகவானின் பாதங்கள் என்று எண்ணுகிறாயா? சத்குருவின் திருப்பாதங்கள் எப்போதுமே நிரந்தரமாக உன் இதயத்தில் பதிந்துள்ளது. உள்நோக்கித் திருப்பி இதயத்தில் ஒளிரும் சத்குருவிடம் சரண் அடைவாய்!"

ரோடா மிஸ்திரியின் இந்த நிகழ்ச்சியைக் கேட்ட நான், 'சிரத்திலிருந்து இதயதிற்கு பயணிப்பது' என்றால் என்ன என்பதை உணர்ந்தேன். அதற்கு உண்மையான பொருள், எண்ணங்களை எல்லாம் உதறித்தள்ளி நமது இதயத்தில் ஒளிரும் ஆழ்ந்த மௌனத்துடன் ஒன்றுவாய். இதுதான் பகவான் காட்டும் நேரடி உபதேசம். 'இதுதான் பகவானின் திருவடிகளில் உன் சிரத்தை வைப்பது' என்பதன் உண்மைப் பொருள்.

ஸ்ரீபகவான் தீவிர சாதகர்களை, 'உள்நோக்கிப் பயணி' 'உள்ளத்தில் ஆழ்வாய்', 'உள்ளுள்ளே ஆழ்ந்து ஒன்றுக' என்று அடிக்கடி வலியுறுத்துவார். பகவான் நம்மை, நமது ப்ரக்ஞையை தலையிலிருந்து, அதன் பிறப்பிடமாகிய இதயத்திற்கு கொண்டுவர வழிகாட்டுகிறார். மனத்தை நம் இதயத்தில் சுத்த மௌனத்தில் ஆழ்த்துவதே உள்ளுறையும் நம் சத்குருவிற்கு நாம் செய்யும் சரணாகதி.

இதயமே நமது உள்ளுறை குரு
மௌனமே நமது உள்ளுறை குரு
அருணாசலமே நமது உள்ளுறை குரு
பகவான் ரமணரே, நமது உள்ளுறை குரு

பகவான் ரமணர் நம்மை உள்ளுறை குருவிடம் சரணடையக் கூறுகிறார். அந்த ஆக்ஞையை ஏற்று அதன்படி நடப்பது நம் கடமை அல்லவா!

# அக்ஷர மணமாலை
# ஒரு தத்துவக் கருவூலம்

## டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

*பகுதி 13*

*பொதுவாக இறைவனைப் பாடிய அடியார்கள் பலர் பரமனைப் பற்றிய அறிவு புலப்படத் துவங்கியதும் அவன் எத்தகைய உயர் நிலையில் இருக்கிறான் என்று உணர்கின்றனர். அவனிடம், தாங்கள் செய்த பிழை பொருத்து அருள வேண்டுகின்றனர். அர்ச்சுனன் கண்ணனின் விஸ்வரூபத்தைப் பார்த்தவுடன், 'ஐயனே உன்னை என் நண்பன் என்று நினைத்து கிருஷ்ணா, யாதவா, தோழனே என்று உரிமையுடன் விளித்து தவறு பல செய்து விட்டேன். மன்னிக்க வேண்டும். உன் பரதத்துவத்தை உணர்கிறேன். நீ உன் பழைய சாத்விக உருவை அடைய பிரார்த்திக்கிறேன்; ஏனென்றால் இந்த மகத்தான உருவத்தைக் காண எனக்கு அச்சமாக இருக்கிறது' என வேண்டுகிறான் (பகவத் கீதை 11.4145). இறைவனுக்கு அருகே செல்லச் செல்ல அவனுடைய சர்வசரீரத்வம் என்னும் உயர்நிலை பக்தனுக்கு தெரிய ஆரம்பிக்கிறது. அப்பொழுது அறியாமல் செய்த தன்னுடைய பிழைகளுக்கு அவன் மன்னிப்புக் கேட்கிறான். ஆழ்வார்களும் நாயன்மார்கள் பலரும் இம்முறையையே பின்பற்றுகின்றனர்.*

*ஆனால் உரையாசிரியர்கள் இதை வேறு கோணத்தில் பார்க்கின்றனர். பக்தர்களின் பிழைகளை அவன் மன்னிக்கிறான் என்பது மட்டுமல்ல, அவர்கள் எடுத்துக்கொள்ளும் உரிமையையும் அவன் விரும்புகிறான். அதனாலேயே திருமணகோலத்தில் இருந்த சுந்தரரிடம் வம்பு பல செய்யும் பிரான்,*

பின்னர் அவருக்கு அருளி 'நீ பித்தனா?' என்று கேட்ட அடியாரிடம் 'என்னைப் பித்தன் என்றோ அழைத்துப் பாடுக' என்று அடியெடுத்துக் கொடுக்கிறான். 'பித்தா பிறைசூடிப் பெம்மானே' என்னும், ஏழாம் திருமுறைப் பாடல் நமக்குக் கிடைக்கிறது. இது அவனுடைய எளிவந்த நிலையைக் குறிக்கும். அடியாரை அவர்தம் நிலையிலேயே வைத்து அரவணைத்துக் கொள்வதே அவனுக்கு உகப்பாக இருக்கிறது.

ரமணரின் நோக்கில் இது மிகவும் உயர்ந்த நிலை. அவர் உபதேசவுந்தியாரில் கூறும் ஒரு கருத்தைப் பார்ப்போம்:

தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்

சுலபமான வரிகள். ஆனால் இதில் கூறப்படும் கருத்து மிக மிக ஆழமானது. தானாக இருப்பது, என்பது பெரிய ஒரு தத்துவ அரண்மனையின் நுழைவாசல். வெளிப்படையாகப் பார்த்தால் இது என்ன பெரிய விஷயம் என்று தோன்றலாம். ஆனால் ஒரு ஜீவன் தானாக இருப்பது என்பது ஆன்மீகத்தேடலின் முக்கிய அம்சம். அத்வைத ரீதியில் பார்த்தால் இது இரண்டற்று விளங்கும் மெய்ப் பொருள். தன்னுடைய உண்மை நிலையை சீவன் அறிதலே, விடுதலை எனப்படும் மோக்ஷ நிலைக்கு அவன் செல்ல உறுதுணையாகிறது. இதுவே தன்னை அறிய அதாவது தன்னிடமின்றி வேறாக இல்லாத பரத்தை அறிய, சிறந்த வழி. இதை இப்பாடலின் அடுத்த வரிகள் உணர்த்துகின்றன

ஆனால் சற்று அத்வைதம் என்னும் அந்த கோபுரத்திலிருந்து இழிந்து தரைக்கு வந்தால், இதையே வேறு விதமாகவும் அணுகலாம். ஜீவன் தன்னை பௌதிக அளவில், இந்தப் பெயர், இந்தத் தொழில், இந்த ஊர் என்று ஐக்கியப்படுத்திக் கொள்கிறது. 'விசிடிங் கார்ட்' அடித்துக் கொள்கிறது. இந்தத் 'தான்' எனப்படும் அடையாளமே உண்மை என்று நம்புகிறது.

*ஆனால் அநுபவம் பெற்று முதிர்ச்சி அடையும்போது, தன் அடையாளம் இது அல்ல எனத் தெளிகிறது. இதற்கும் மேற்பட்ட ஒரு அறிமுகத்தை தனக்குத் தானே காட்டிக்கொள்கிறது. பல்வேறு பிறவிகள் எடுத்தும் தன் உண்மை நிலையை உணராத பாவி என்ற உணர்வு ஏற்படும் அந்த நிலையில் அது தன்னுடைய பௌதிக சட்டைகளைக் கழற்றி, தன்னுடைய உண்மையான உருவத்தைப் பார்க்கத் துவங்குகிறது. 'தானாக இருத்தல்' என்னும் இந்த நிலையில் எங்கோ தூரத்தில், வரம் கொடுக்கும் சாதனமாகப் பார்த்த பரம் பொருள் கிட்டே நெருங்கி வருதலைக் காணத்துவங்குகிறது. பந்த பாசங்கள் விலகும் இந்தச் சூழலில் இறைவன் என்னும் ஒரு தனிப்பட்ட தன்னிடமிருந்து மாறுபட்ட ஒரு சக்தி தேவையில்லை என்ற அநுபவம் உண்டாகிறது. சம்சாரத்தின் இருமைகளால் துயருற்றுக் கிடந்த சீவன் அத்வைதமென்னும் பேற்றைப் பெறுகிறது. இதுவே தன்மய நிஷ்டை என்று சுருக்கமான பாட்டில் விளக்கம் தருகிறார் பகவான்.*


*தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்*
*தான் இரண்டு அற்றதாலுந்தீபற*
*தன்மய நிட்டையீதுந்தீபற - (உபதேசவுந்தியார் 26)*

*இந்த இரண்டற்ற நிலையில் சத்சித் ஐக்கியம் தோன்ற அது முக்தி பாவத்தின் இறுதி நிலையான ஆனந்த நிலைக்கு அவனை இட்டுச் செல்கிறது. இந்த நிலையை அடைய சிலருக்கு நீண்டகாலப் பயிற்சி தேவைப்படுகிறது. சிலர் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இந்த அநுபவத்தைப் பெருகின்றனர். இளம் வயதிலேயே அதைப் பெற்ற சிலரும் உண்டு. இறைவனை அடைய வயது ஒரு தடையல்ல என்பது நமது தத்துவம். அது மட்டுமல்ல, இளவயதினருக்கே, அவனை அதிக சிரமமின்றி அடைய முடியும் என்ற கோட்பாடும் நம் சாஸ்திரங்களில் வலியுருத்தப் பட்டுள்ளது. தர்க்க ஸங்க்ரகம் என்னும் நூலில் 'சிறு வயதினருக்கே,*

*கேட்கும் பொருளை உடனே கிரகிக்கும் சக்தியும் அதை உள்வாங்கி என்றும் நினைவில் கொள்ளும் ஆற்றலும் காணக்கிடைக்கிறது' என்று மணவாளமாமுனிகள் சொல்கிறார். (க்ரஹண தாரண படுத்வம்) சம்பந்தரும், நசிகேதசும், துருவனும் பிரஹலாதனும் இதற்கு நல்ல உதாரணமாவர். ஆண்டாள் மிகவும் இளவயதில் இறைவன்பாற்படுகிறாள். தந்நிலை இழக்கிறாள். அவள் முறைப்படி கல்விகேள்விகளை கற்று அறிந்தவள் அல்லள். கண்ணன் புகழை, தந்தையின் மூலமும் மற்றும் இல்லத்திற்கு வந்த பெரியோர்களின் சம்பாஷணை மூலமாகவே அறிகிறாள். ஆனால் அவள் இயற்றிய நூலகளில் அரிய பல கருத்துகளைப் பார்க்க முடிகிறது. குறிப்பாக மற்ற சான்றோர்கள் இயற்றிய நூல்களில் காணும் தன்னிரக்கம், உலக வாழ்வில் வெறுப்பு போன்ற கருத்துகளை அவள் நூல்களில் பார்க்க இயலாது. இளம் உள்ளத்தில் தோன்றும் உரிமையும் மிடுக்கும் கலந்த பக்தியையே நாம் காண்கிறோம். இது தற்கால சந்ததியினருக்கு ஏற்புடையதாக இருக்கிறது. அதனால்தான் மற்ற எந்த நூலைவிட இது அதிகமாகப் படிக்கப்பட்டதாக இருக்கிறது*

*ஆனால் அனைவருக்கும் ஏன் இந்த நிலை சுலபமாகக் கிட்டுவதில்லை? இதுவும் இறைவன் செயலே*

*இறைவனின் தொழிலை மூன்றாகப் பிரிப்பார்கள். அவையே ஆக்கல், காத்தல், அழித்தல் என மூன்றாகும். அத்துடன் வேதாந்த வடிவில் வேறொரு செயலையும் காண்பர். அது திரோதானம் எனப்படும். இதுவே 'மறைத்தல்' என்னும் செயல். நம்முள் உறையும் பரத்தின் உண்மை நிலையை நாம் அறிய முடியாதபடி செய்தலே இந்த மறைத்தலாகும். நமக்குள்ளேயே இருக்கும் ஒரு பொருளை நாம் சுலபமாக அறிவோம் என்பது உலக நியதி. ஒருவேளை அப்பொருள் இருட்டடிக்கப் பட்டு இருந்தால் அது புலப்படாமல் போகலாம். ஆனால்*



இந்தப் பொருளோ, ஒளி வடிவமானது. நம்மை விட்டு ஒரடிகூட விலகாதிருப்பது. ஆனால் இங்கு அது 'மறைத்தல்' என்னும் நியதியால் மாறுபட்டுக் காட்சியளிக்கிறது. இதுவும் அவன் அருளே. நம்முடன் உறையும் பல்வேறுபட்ட பாவச் செயல்களை கழிக்க இந்த மறைத்தல் என்னும் திருவிளையாடலைச் செய்கின்றான் ஈசன். திருமூலர் இதை நயமாகச் சொல்கிறார்.

உள்ளத்து ஒருவனை உள் உறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடன் இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே. (திருமந்திரம் 431)

இதுவே இந்திய சித்தாந்தம். எங்கோ இருக்கும் ஒருவனை, நம்முடைய அறிவாலோ, பக்தியாலோ, மற்றும் வழிபாட்டாலோ அடைவது என்பதே பல சித்தாந்தங்கள் சொல்லும் வழி. ஆனால் நாம் காணும் பரமாத்மா சதாசர்வகாலமும் நம்மிடையே வசிக்கிறான். 'உள்ளமும் தானும் உடன் இருக்கினும் உள்ளம்

அவனை உரு அறியாதே.' என்னும் வரிகள் நம்முள்ளே இருக்கும் ஒரு பரத்தை நாம் அறியாமல் இருத்தலைக் குறிக்கும். நம்முடைய மலங்களை முற்றிலும் நீக்கி அவன் ஒளியைக் காண்பதே நம் பணி. இது சுலபமா அல்லது வெளியிலே இருக்கும் ஒன்றை உணர்வது எளிதா என்பது அவரவர் அபிப்பிராயம். ஆனால் இது ஓர் உயரிய நிலை என்பதில் ஐயமில்லை.

'உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை' நம்முடனே ஐக்கியப் படுத்திக்கொண்ட ஒருவர் நிலை என்ன என்று பார்ப்போம். ஆழ்வார்கள் பன்னிருவருள்ளும் முதன்மையாகக் கருதப்படுபவர் நம்மாழ்வார். ஆயிரம் பாசுரங்களுக்குமேல் இயற்றியவர். அதே போல் கால அளவில் முற்பட்டவர்கள் என்ற பெருமை முதலாழ்வர்களாகிய பொதிகை, பூத, பேயாழ்வார்களையே சாரும். ஆனால் இவர்களெல்லோருக்கும் கிடைக்காத பெரும் பேறு ஆண்டாளை வளர்த்த விஷ்ணு சித்தர் என்னும் அப்பெருமானுக்கே கிடைத்தது. அவர் ஒருவரே 'பெரிய ஆழ்வார்' என்ற பெயரைப் பெற்றார். மற்றவரெல்லாம் 'எனக்கு பற்று நீங்கவேண்டும், நான் இறைவன் திருவடியை அடையவேண்டும்' என்று கேட்டுக்கொண்டனர். இதுவே மிக உயரிய நிலை. சாமானியருக்குக் கிட்டாத நிலை. ஆனால் பெரியாழ்வாரோ இதையும் தாண்டி தனக்கென்று எதையும் வேண்டாத பற்றற்ற நிலையை எய்தினவர். இறைவனே, மதுரை மாநகர வீதிகளில் பாண்டிய மன்னரால் கௌரவிக்கப்பட்ட அப்பெரியாரைக் காண வேண்டி வானவீதியில் தோன்றுகிறான். அப்படிபட்ட பரம்பொருளுக்கு கண்திருஷ்டி பட்டுவிடுமோ என அஞ்சி பல்லாண்டு பாடுகிறார் பெரியாழ்வார். தனக்கென எதையும் வேண்டாமை அகங்காரத்தை அழிக்கிறது. தன்னிலை துறந்த நிலையில் அவரால் எங்கும் பரம்பொருளையே காணும் பேற்றை

*அளிக்கிறது. இந்தப் பாசுரமே வைணவ சித்தாந்தத்தை பின்பற்றுவோர் முதலில் விண்ணப்பிக்கும் 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்னும் ப்ரபந்தப் பாசுரம்.*

*இது மிகபெரிய நிலை. ரமணர் காணும் வழி. இங்கு சற்று ஐயம் ஏற்படலாம். பெரியாழ்வார் தானாய் இருத்தல் என்னும் நிலையை அடைந்தார் எனின், பரமன் தன்னிடமிருந்து வேறுபட்ட ஒருவன் என்னும் உணர்வை ஏன் அடைய வேண்டும். அந்த நிலையில்தான் அவர் இறைவனுக்கு கண்திருஷ்டி என்னும் எண்ணத்தை அடைகிறார் அல்லவா? இதற்கு விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை சற்று சிந்திக்க வேண்டும். இதுவும் ஒரு உயர்ந்த அத்வைதமே. ஆனால் ஜீவன் பரமனைத் துதித்து தன்னை அவன் நிலைக்கு உயர்த்தும் முயற்சியாக இது பார்க்கப் படுகிறது. இதற்கு ஆசைகளை ஒழித்தல் என்னும் நிலை அத்தியாவஸ்யமாகிறது. இங்கு நாம் ஸ்வதந்திரன் என்னும் நிலையை நீக்கி 'பாரதந்த்ரியன்' என்னும் நிலையை அடைய வேண்டும். இறைவனே துணை என்னும் எண்ணம் 'நான் செய்கிறேன்' என்னும் நிலைக்கு வேறு பட்டது. 'நான் செய்பவன் அல்லன்' என்பது ரமண சித்தாந்தம். இரண்டும் ஒன்றே. மற்றொரு நிலை 'நான் நீசன்' எல்லோரையும்விட எளியவன் என்பது. இது நாம் எதற்கும் லாயக்கில்லை என்னும் தாமச குணமன்று. அனைவரிடமும் நல்லவற்றையே காணும் எளிமை. அகங்காரம் நீங்கிய நிலை. உயரிய சத்வ குணத்தில் ஒன்றுபட்ட சீவாத்மா தன்னுடைய உண்மைத் தன்மையை அறிய ஆரம்பிக்கும் நெடும்பயணத்தின் முக்கிய திருப்பம்.*

*இப்பயணத்தின் நோக்கம் ஒன்றாயிருப்பினும், அடியாரின் மனப்பாங்கில் சில தனித்தன்மைகள் இருப்பதை பெரியாழ்வாரின் அனுபவம் விளக்குகிறது.*

இறைவனை அடையத்துடிக்கும் வேறு சில அடியாரின் வாக்கினைப் பார்ப்போம். சித்தர்களில் புகழ் பெற்றவர் பத்திரகிரியார். இவருடைய 'மெய்ஞ்ஞானப் புலம்பல்' இறைவனடி காணத்துடிக்கும் ஒரு அடியாரின் நெஞ்சக்குமறலாக வெளிப்படுகிறது.

*அத்தன் இருப்பிடத்தை ஆராய்ந்து பார்த்து நிதம்*
*செத்த சவம்போல் திரிவதினி எக்காலம்? (21)*

இதைப் பின்னர் விரிவாகப் பார்க்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். நந்தனார் நமக்கெல்லாம் மிகவும் பரிச்சியமான அன்பர். அவர் வரலாற்றை அழகிய பாடல்களாக வடித்துக் கொடுத்தவர் கோபாலகிருஷ்ண பாரதி. அவருடைய 'மெத்தகடினம் உமக்கடிமை' என்னும் பாடல் பிரசித்தி பெற்றது. அதில் வரும் கீழ்க்கண்ட வரிகளில் தத்துவம் மிளிர்கிறது.

*கண்டாரும் கிடையாது விண்டாருஞ் சொன்னதில்லை*
*அண்டாண்ட கோடியெல்லா மொன்றாய்ச்*
*சமைந்திருக்கும்*
*அல்லவோபறையன் சொல்லவோ அங்கே*
*செல்லவோ நேரமாகுதல்லவோ*

பத்ரகிரியாரும் நந்தனாரும் கண்ட முறையே வேதம் சொல்லும் வழி. பிரஹதாரணிய உபனிஷத்து வேதந்தத்தை படிக்க முயல்வோருக்கு ஒரு அரும்கடல். ஒரு கருத்து நம் தர்ம மார்கத்திற்கு ஏற்புடையதல்ல என்றால், அதைப் பண்டிதர்கள் 'இது பிரஹதாரணியத்துக்குப் புறம்பானது' என்று கூறி ஒதுக்கிவிடுவார்களாம். அந்த அளவு பிரசித்தமானது. இதில் அடிக்கடி ஜனகர் யாஜ்ஞவல்கியர் சம்வாதங்கள் நடைபெறும். அதில் வாழ்க்கைப் பயணத்தின் இறுதியில் தான் எங்கு செல்வேன் என்னும் ஐயம் மன்னனுக்கு ஏற்படுகிறது. அதற்கு தவச்செல்வர் சொல்கிறார், 'பரமாத்மாவை நீவிர் சென்றடைவீர். ஆனால் அதை அறுதியிட்டு, 'இத்தன்மையது' என்று

*சொல்லயியலாது. அது அறிவுக்கு எட்டாத ஒன்று. அழிவுஅழிக்கப்படுதல் என்னும் நிலைகளைக் கடந்தது. எதற்கும் கட்டுப்படாதது. லாபநஷ்ட நிலைகளைக் கடந்தது. பற்றுகள் அற்றது. பற்றப்படுவதுமில்லை. அந்த நிலை பயமற்றது. அது உம்மால் அடையப்படும்.'*

சற்று கடினமான விளக்கம். மூலத்தைப் பார்த்தால் அதிக வெளிச்சம் கிடைக்கும் 'ச ஏஷ நேதிநேதி ஆத்மாக்ருஹ்ய; நஹி க்ருஹ்யதே. அசீர்ய; ந ஹி சீர்யதே.... ந வ்யததே, ந ரிஷ்யத்யபயம் வை ஜனக ப்ராப்தோசி (பிரஹதாரணிய உபனிஷத்து 4.2.4). இந்த 'நேதி நியாயம்' சைவ தத்துவங்களிலும் அதிகம் பேசப்படுகிறது. ஒரு பொருளுக்கு விளக்கம் அளித்தால் அது ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். பரம்பொருள் அந்நிலைகளைக் கடந்தது. இந்தத் தன்மை இல்லை. அந்தத் தன்மை இல்லை என்று விளக்கும்போது அதன் எங்கும் வியாபித்திருக்கும் தன்மை வெளிப்படும். ஆனால் அது புரியாமல் போய்விடக்கூடிய ஒன்று என்று அஞ்சவேண்டாம். அது பயமற்றது என்ற விளக்கத்தையும் தருகிறார் ஞானப்பழமான யாஜ்ஞவல்கியர். சிஷ்யனான ஜனகரும் இந்த விளக்கத்தைப் பெறத் தகுதி படைத்தவராக இருப்பதாலேயே இந்த உபநிஷதம் புகழ் பெற்ற பல சம்வாதங்களை உள்ளடக்கியதாக அமைந்தது.

'இந்தத் தன்மை இல்லை இந்தத் தன்மை இல்லை' என்கிற தர்க்க அமைப்பு அறிவு பூர்வமானது மட்டுமல்ல. அநுபவத்திற்கும் ஏற்றது. இதை சற்று வேறுவிதமாகப் பார்ப்போம். சர்க்கரை, நெய் இவற்றைக் கலந்து ஒரு சிறந்த இனிப்புப் பதார்த்தம் செய்கிறோம். அதன் சுவையை அநுபவிக்க இயலும்; ஆனால் விளக்க முடியாது. அதேபோல ஒரு மலரின் நறுமணத்தையோ, நாதத்தின் சுவையையோ தென்றலின் இனிமையையோ அநுபவிக்க இயலும்; ஆனால் விளக்க

முடியாது. ஆனால் அந்த அநுபவம் பெற்றவர்கள் அதை உணர்வார்கள் என்பது எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடியது. புலன்களால் உணரக்கூடிய சுவைக்கே இந்த நிலையென்றால், இவையெல்லாம் கடந்த பிரம்ம நிர்வாணம், விளக்கங்களுக்குக் கட்டுப்பட்டு இருந்தால்தான் வியப்பு!

இந்த உணர்வையே பத்திரகிரியார் 'செத்த சவம் போல் திரிவது இனி எக்காலம்?' என்று கேட்கிறார். இந்த வரியே லாஜிக் என்ற சாத்திரத்திற்கு வேறுபட்டது. பரம்பொருள் ஒரு இனிய அநுபவம் என்பதே நம் சித்தாந்தம் கண்ட முடிவு.

இந்த அநுபவம் பெற்றவன் எப்படி இருப்பான் என்பதற்கு விளக்கம் 'தெளிவு' என்னும் பாடலில் கிடைக்கிறது. இதை பாரதியார் சொன்னவிதம் மிகவும் எளிமையானது. 'எல்லாமாகிக் கலந்து நிறைந்தபின் ஏழைமை உண்டோடா?' என்ற பாடல் இந்த நிலையின் ஏற்றத்தை விளக்கும். இந்த நிலையில் 'புத்தி மயக்கமுண்டோ? வேதனை யுண்டோடா? எத்தனை கோடி இடர் வந்து சூழினும் எண்ணம் சிறிதுமுண்டோ?' என்று பலவித 'நேதி' நியாயங்களை சொல்லி, இறுதியில் யாஜ்ஞவல்கியர் சொன்ன அதே கருத்தை விளக்குகிறார்

ஆன்ம ஒளிக்கடல் மூழ்கித்திளைப்பவர்க்கு
அச்சமுண்டோடா? மனமே
தேன்மடை இங்குத் திறந்தது கண்டு
தேக்கித் திரிவமடா!

ஆன்மீக ஆற்றலின் பெருமையைப் பார்க்க இதைவிடச் சிறந்த விளக்கமில்லை. அந்நிலை பெற்றார்க்கு வேதனையோ, பயமோ, குழப்பமோ, மயக்கமோ எதுவும் இல்லை. ஏன்?

நாவுக்கரசர் எளிமையே உருவானவர். அவர் ஒரு தன்னிலை விளக்கம் தருகிறார். 'நான் யார்க்கும் அடிமை

இல்லேன்; மரணத்தைக் கண்டு அச்சமற்றவன்; அதனால் சுவர்க்க நரக உலகங்களைக் கடந்தவன். நோய்கள், பயங்கள் போன்றவை என்னை அணுகாது. யாரையும் கண்டு பயமும் எனக்கில்லை; எனக்குத் துன்பம் என்பதில்லை. இன்பம் மட்டுமே நிலைத்து நிற்கிறது.' எப்படி அவர் இந்த மிக உயர்ந்த நிலையை அடைந்தார்? இத்தகைய பேராண்மை எப்படி அந்த அடியார்க்கு அடியனான எளியோனிடம் வந்தது? விளக்கம் அப்பாடலின் இறுதி வரிகளில் காணப்படுகிறது.

'கோமார்க்கே நாமென்னும் மீளா அடிமை
கொய்மலர்சேயடியினையே குறுகினோமே'

இறைவனுக்கே ஆட்பட்டு அவனுக்கு என்றென்றும் அடிமையாகிப் போனார். அவன் சேவடியில் குறுகினார். ஆன்மீகத்தில் பெருகினார். உலகியில் பிரச்சினைகள் அவரைகண்டு ஓடிப்போயின. அந்த உயர் நிலையைப் பெற்ற அன்னார்க்கு நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் என்று பறை சாற்றும் தைரியம் வந்தது.

இதுவே ஓம்காரம் உணர்த்தும் தத்துவம். அ+உ+ம் என்ற மூன்று எழுத்துக்களின் கூட்டே 'ஓம்' என்னும் வடிவம். (இதற்குச் சற்றே மாறுபட்ட சில விளக்கங்கள் அவரவர் சித்தாந்தங்களுக்கு ஏற்ப கிட்டுகின்றன.) அ என்பது அகார சப்தனான பரம்பொருள். ம என்பது ஜீவாத்மா. இவை இரண்டிற்கும் என்ன தொடர்பு? ஜீவன் பரம்பொருளுக்கே என்று அமைந்தது என்பதே அந்த சம்பந்தம். இது உகாரத்தால் விளக்கப் படுகிறது. இது எல்லாவித சிந்தனையாளர்களுக்கும் ஏற்புடையது. மாயையால் பரம்பொருளிலிருந்து மறைக்கப்பட்ட சீவன் தன்னுடைய இயல்பு நிலையை அடைய எடுக்கும் முயற்சிகளே அதற்கு நிரந்தர ஆனந்தத்தை அளிக்கும். இதுவே ஓம்காரத் தத்துவம் மூலம் சாத்தியமாகிறது. இலக்கண ரீதியில் இதற்கு அழகிய ஒரு விளக்கம் பார்க்கலாம். வேற்றுமை உருபுகள் இரு

*சொற்களுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்கும். அவை எட்டு வேற்றுமைகள் என அழைக்கப் படும். அதில் சில காரணங்களால் உருபு சில சமயங்களில் சொல்லப்படாமல் மறைந்து தொக்கி நிற்கும். இதை வேற்றுமைத் தொகை என்று அழைப்போம். அ என்னும் பரத்திற்கு ம என்னும் சீவன் என்றும் அடிமை என்னும் உண்மை நமக்குப் புலனாகும்போது, அங்கு 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு மறைந்து கிடக்கும் உயரிய விளக்கம் புரியும். இதை 'லுப்த சதுர்த்தி' (நான்காம் வேற்றுமை மறைந்து இருத்தல்) என்று வடமொழி வல்லுனர்கள் அழைப்பர். இதுவே நாவுக்கரசரின் வாழ்வு காட்டும் உண்மை. கோமார்க்கே எனற சொல்லில் பாரதந்திரியத்தின் பொருள் முழுவதும் கிட்டுகிறது.*

*இதை அடையப்பெறாதவர்க்கு என்ன வழி? பகவான் சுருக்கமாகக் காட்டுகிறார்.*

*தானே தானே தத்துவம் இதனைத் தானே*
*காட்டுவாய் அருணாசலா - (அக்ஷரமணிமாலை 43)*

*தானாய் இருத்தலே தன்னை அறிய வழிகாட்டி என்ற தத்துவத்தை உபதேசவுந்தியாடில் பார்த்தோம். அதன் கருத்தை மேலும் தெளிவாக விளக்குகிறது இப்பாடல். தானே என்ற கருத்தை நாம் நம்முடைய வாழ்க்கைப் பாதையில் பலவித சமயங்களில் பார்க்கிறோம். ஆனால் அது லௌகீகத்தின் குறுகிய வட்டத்தில் பலமுறை சிற்றின்பப் பாதையில் தன்னை இழக்கிறது. தத்துவம் என்ற சொல் தத் + த்வம் என்ற சொற்களின் கூட்டு. 'நீயே அது' என்பது அதன் பொருள். 'அது' என்பது மாயயைக் கடந்த ஒரு அநுபவம். பேதங்கள் விலகிய நிலை. பிரம்மத்துடன் சீவன் ஐக்கியமாகும் நிலை. 'தான்' என்னும் வ்யக்தி, தன் வெளிப்புற சட்டைகளைக் களைந்து 'தத்' என்னும் ஜோதியுடன் இணைவதே தத்துவம். அதற்கு வெளியிலிருந்து வரும் உந்துதல்கள் பயனளிக்காது. தன்னைத் தானே உயர்த்திக்கொள்ளும் அத்புத மானுட சக்தி. இதனைக்காட்டி அருள் என்பது*

பகவான், அருணாசல ஈசனிடம் வைக்கும் பிரார்த்தனை. ஆனால் 'இதனைத் தானே' என்னும் பதத்திற்கு வேறு பொருளும் கொள்ளலாம். 'வேறு எதையும் எனக்கு அளிக்காதே; பரதத்துவத்தை மட்டுமே காட்டு' என்னும் வேண்டுகோளும் தொக்கி நிற்கிறது. நசிகேதசிடம் பலவித போகப்பொருட்களை அளிப்பதாக யமன் ஆசை காட்டுகிறான். அச்சிறுவனோ, உயர்ந்த தத்துவப் பொருளையே யாசிக்கிறான். இதுவே உயர்ந்தோரின் நிலை.

இந்த அருள் பெற்றதாலேயே வாகீசர் நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்படோம் என்று ஆனந்தத் தாண்டவம் புரிகிறார். இந்தத் தத்துவமே ஓம்காரப் பொருள்; நம்மை உய்விக்கும் மந்திரம்.

## திருமதி. பத்மா வெங்கடகிருஷ்ணன்



சென்னை, ரமண கேந்திரத்தின் தலைவர் திரு. வெங்கடகிருஷ்ணன், அவர்களின் துணைவியார் திருமதி. பத்மா வெங்கடகிருஷ்ணன் அவர்கள் கடந்த அக்டோபர் 11, 2018 அன்று பகவானிடம் ஐக்கியமாகினார். அவரைப் பிரிந்து வாடும் திரு. வெங்கடகிருஷ்ணன் அவர்கள் 'ஜெயஸ்ரீ' என்று அன்போடு அறியப்பட்டவரும் பகவானின் அணுக்கத் தொண்டராகிய மணவாசி ராமசாமி ஐயரின் புதல்வராவார். திருமதி பத்மா அவர்கள் சிறுவயது முதல் திருவண்ணாமலையில் அவரது நெருங்கிய உறவினரான யோகாம்பாள் அவர்களால் வளர்க்கப் பெற்றவர். சிறுவயது முதலே திருவண்ணாமலையில் மணவாசி ராமசாமி அவர்களிடம் இசையைக் கற்றவர். பகவான் காலத்தில் நாள்தோறும் மாலையில் பகவானின் முன்பாக பகவான் பாடல்களை பாடுவதை வழக்கமாகக் கொண்டவர். பகவானின் நேரடி திருக்கண்ணோக்கம் கிடைக்கப் பெற்றவர். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ரமணோதயம் தனது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# மூன்று நிலைகளின் மறைபொருள்

**ராம் மோஹறன்**

*தத்தாத்திரேயர் பரசுராமனுக்கு அளித்த ஞானநெறி உபதேசம் 'திரிபுர ரஹஸ்யம்' என்னும் உயர்வு மிக்க வேதாந்த நூலாகும். 8850 செய்யுட்களில் மிகச் சிறந்த ஆன்மிக வழிகாட்டியாக இந்நூல் திகழ்கிறது. இதன் சிறப்பை பகவான் ரமணர் பலமுறை எடுத்துக் கூறியுள்ளார்.*

*'திரிபுரம்' என்ற சொல் நாம் வாழ்கின்ற மூன்று நிலைகள் ஜாக்ரதை (விழிப்பு நிலை), ஸ்வப்னம் (கனவு நிலை) சுஷுப்தி (ஆழ்துயில்) ஆகியவற்றைக் குறிக்கிறது. ஆழ்துயில் நிலையிலே மனம் ஆத்மாவில் ஒடுங்குகிறது. கனவு நியில் அது கனவுலகத் தோற்றங்களை உண்டாக்குகிறது. விழிப்பு நிலையில் வெளியே காணும் உயக்த்தை உருவாக்கி உலக நடவடிக்கைகளில் பங்கேற்கிறது. ஆத்ம சாதனை மூலம் இம்மூன்று நிலைகளைக் கடந்து சென்றால் 'துரியம்' என்னும் நான்காவது நிலை சித்திக்கும். "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்" என்று ஞானியர் குறிப்பிடுவது இதனையே. இந்நிலையை எய்துவதற்கு வழிகாட்டுவதே 'திரிபுர ரஹஸ்யம்' என்பது.*

*இன்றைய உலகில்தான் ஆண்-பெண் சமத்துவம் என்பது வரவில்லை. சிறந்த ஆன்மிக சாதனை செய்து வெற்றிபெற்ற மங்கை தன் கணவனுக்கு குரு ஆக அமைவதையும் இல்லற வாழ்க்கை ஆத்ம சாட்சாத்காரம் பெறத் தடை இல்லை; சரியான சாதனை மூலம் சம்சாரிகளும் ஜீவன்முக்தி அடையலாம் என்பதையும், நம்முடைய லட்சியத்தை திடமாக நிர்ணயித்து வெற்றிபெற முடியும் என்பதையும் இந்நூல் கூறுகிறது.*

*இதன் கதைப்பகுதி:*

*தர்ஸனா எனும் நாட்டை ஆண்டுவந்த முக்திசூடன் என்ற அரசனுக்கு மகன்களாய் இருந்த ஹேமசூடன், மணிசூடன் என்னும் இருவர் பரிவாரங்களுடன் கானகத்தில் பயணம் செய்தனர். அப்போது திடீரெனப் புழுதிப் புயல் கடுமையாக வீச, கனத்த மழையும் பெய்யத் துவங்கியது. கண்மண் தெரியாமல் அனைவரும் சிதறி ஓடினர். கூட்டத்தில் இருந்து பிரிந்த ஹேமசூடன் காட்டைவிட்டு வெளியே வந்தான். அதற்குள் மலையும், புயலும் ஓய்ந்துவிட்டது. எதிரில் ஆற்றங்கரையில் தெரிந்த ஒரு பர்ணசாலையைக் கண்டு ஹேமசூடன் அதை நோக்கி நடக்கத் தொடங்கினான். அங்கே இருந்த பூந்தோட்டத்தில் அழகிய மங்கை ஒருத்தி செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு இருந்தாள். களைத்துச் சலித்து வந்த இளைஞனைக் கண்ட அவள் அவனை வரவேற்று அமரச் செய்து கனி, காய் போன்ற உணவு வகைகளை அளித்தாள். பின்னர் அருந்த பாலினையும் குவளையில் தந்தாள்.*

*பசியும், களைப்பும் நீங்கிய ஹேமசூடன் அந்த மங்கையைக் கண்டு வியந்து, "எனக்குத் தக்க சமயத்தில் உதவி புரிந்து காப்பாற்றிய உனக்கு மிக்க நன்றி. நீ யார்?" என வினவினான். அவள் சொன்னாள்: "நான் வியாக்ரபாத ரிஷியின் வளர்ப்பு மகள். இந்த இடம் அவரது பர்ணசாலை. வித்யாப்ரபா என்ற வித்யாதர மங்கைக்கும், அசேனன் என்ற மன்னனுக்கும் பிறந்தவள். நான் பிறந்தவுடன் என் தாய் ஆற்றங்கரையில் விட்டுவிட்டுச் சென்று விட்டாள். அங்கே என்னைக் கண்ட வியாக்ரபாத ரிஷி என்னைத் தன் பர்ணசாலைக்குள் கொண்டுவந்து என்னை வளர்த்து, கல்வி கேள்விகளில் சிறந்தவளாக வளர்க்கிறார். அவரே எனது தந்தை ஸ்தானத்தில் இருப்பவர் என்று கூறுவதில் நான் பெருமை அடைகிறேன். அவர் சிறிது நேரத்தில்*

இங்கு வருவார். அவரிடம் உங்கள் கருத்தினைத் தெரிவியுங்கள்” என்று கூறினாள்.

தான் கூறாமலேயே, அவளை மணக்க விரும்புவதைக் குறிப்பால் உணர்ந்த ஹேமசூடன் அவளது அறிவுக் கூர்மையைக் கண்டு வியந்தான். அப்போது அங்கே வந்த முனிவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவனது உள்ளக் கிடக்கையைப் புரிந்துகொண்ட முனிவர், தனது மகளுக்குத் தக்க மணவாளன் அவனே என்று நிச்சயித்து ஆசி வழங்கினார்.

இங்ஙனம் கானகம் சென்ற இளவரசன் கன்னிகையுடன் திரும்பினான். ஹேமலேகாவின் எழிலையும், அறிவையும் கண்ட அரசனும், அனைவரும் மிக மகிழ்ச்சி உற்றனர். அவர்கள் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

அவர்கள் திருமணவாழ்க்கை பல கேளிக்கைகளிலும், விருந்துகளிலும், உல்லாசத்திலும் கழிந்தது. புலனின்பம் துய்ப்பதிலேயே முழுவதும் ஈடுபட்டிருந்த ஹேமசூடனுக்கு ஓர் ஐயம் எழுந்தது. “ஹேமலேகா! என் வாழ்விலே மையமே நீதான். உன்னுடன் இருந்த அனுபவத்திலேயே நான் முழு ஆர்வத்துடன் ஈடுபடுகிறேன். ஆயினும் இந்த இன்ப நுகர்ச்சிகளில் நீ உன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்வதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. நீ தனியாய் இருக்கும்போது கண்களை மூடி உலக ப்ரக்ஞையே இல்லாதபடி அமர்ந்திருக்கிறாய். நான் அருகில் வந்தால்கூட உனக்குத் தெரிவதில்லை. இதைக் கண்டு நான் சற்று துணுக்குறுகிறேன்” என்று கூறினான்.

ஹேமலேகா பதிலிறுத்தாள்: “நீண்ட காலமாகவே என் மனதில் ஒரு கேள்வி உள்ளது. நாம் இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபடும்போது, எண்ணற்ற பொருட்களைப் பார்க்கிறோம். பற்றுடன் தொடர்புகொண்டு எண்ணற்ற செயல்களில்

ஈடுபடுகிறோம். இவற்றில் நமக்கு இறுதி நன்மை அளிப்பது எது, நன்மை தராதது எது என்பதற்குத் தெளிவான விடை எனக்குக் கிடைக்கவில்லை. இதற்கு விடை தெரிந்தால் சொல்லுங்கள்" என்றாள். இதைக்கேட்ட ஹேமகூடன் "இது ஒரு பெரிய கேள்வியா? பறவை, விலங்குகட்குக் கூட இதற்கு விடை தெரியுமே! நமக்கு இன்பம் தருவது எதுவோ அதுவே நன்மையானது. எது துன்பம் தருகிறதோ அது நன்மையானது அல்ல" என்றான்.

அதைக்கேட்ட ஹேமலேகா, "நமது அனுபவம் இதற்குச் சாட்சியம் அளிக்கவில்லையே! எதுவுமே நிரந்தரமாக இன்பமோ துன்பமோ அளிப்பதில்லையே! குளிர்காலத்தில் நமக்குக் கதகதப்பு தந்து இன்பம் அளிக்கும் தீயின்முன் வெயில் காலத்தில் அமர்ந்தால் துன்பம்தானே ஏற்படுகிறது? பசியாய் இருக்கும்போது உண்டால் இன்பம் தரும் அதே உணவு, பசி முற்றிலும் ஆறிய பின்னரோ, உடல் நலம் குன்றியபோதோ உண்டால் நமக்குத் துன்பம் தருகிறது அல்லவா! இதைப் பார்த்தால் நாம் அனுபவிக்கும் இன்பமோ துன்பமோ நமக்குக் கிட்டும் பொருளில் இருந்து மட்டும் வரவில்லை. இடம், காலம் தொடர்புடைய பொருள் இவற்றின் மொத்த விளைவு நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள். மனிதன் உலகில் போகாயதமான நோக்கங்களான செல்வம், புகழ், அதிகாரம் மற்றும் புலனின்பம் இவற்றை மக்கள் நாடிஓடிச் செல்கின்றனர். இவற்றைக் குறைவற அடைந்தாலும் இறுதியில் முழு திருப்தி கிடைக்குமா? உங்கள் தந்தையான அரசர்க்கு இவை அனைத்துக் குறைவறக் கிடைத்து இருந்தாலும் அவர் முழு ஆனந்தத்துடன் இருக்கிறாரா என்ன? இவ்வாறான இன்பம் இறுதி ஆனந்தம் ஆகாது. இவை மிகவும் தற்காலிகமானவையே. இடம், பொருள், காலம் மாறும்போது இவ்வின்பங்களும் மாறித் துன்பமாகின்றன.

ஒரு பொருளோ, மங்கையோ அழகான ஒன்று என்று எண்ணி அதை அடையவேண்டும் என்று பித்துப்பிடித்து அலைகின்றானே, அந்த எழில் அந்தப் பொருளின் ஸ்வாபாவிகம் ஆனதா? அது காண்பவன் ஒருவன் பார்வையில்தான் உள்ளது. ஒரு குறிப்பிட்ட நோக்கில், சமயத்தில் ஒரு பொருள் அழகாகத் தோன்றினால், மனம் அதை அடையவேண்டும் என்று ஆசை கொள்கிறது. அதை அனுபவிக்கத் துடிக்கிறது. நீண்ட அகானுபவத்திற்குப் பின் அதிலேயே சலிப்பு உண்டாகிறது. சூழ்நிலை மாறும்போது எந்தப் பொருள் இதுகாறும் சுவை கூட்டியதோ அதுவே சலிப்பைத் தருகிறது. அதேபோல, உடல்நலம் குன்றும்போது, ஜுரம் வந்தபோது, இதுவரை சுவை தந்த இனிப்பு கசப்பைத் தருகிறது. எது துன்பத்தின் சாயலை ஒரு சிறிதேனும் கொண்டதோ அது உண்மையில் இன்பமாகாது. எது நிரந்தரமாக இன்பம் தராமல் சூழ்நிலைக்கேற்ப மாறுபடுகிறதோ அது உண்மை இன்பமாகாது. உலகில் நாம் காணும் உருவங்கள், காட்சிகள் இவை மாறிக்கொண்டே இருப்பதால், அவற்றிலிருந்து நாம் மாறாத இன்பத்தை அடைய இயலாது.

மனிதன் மனம் ஏன் நிரந்தர ஆனந்தத்தை நாடுகிறது; மனிதமனம் தனக்கு முன் பரிச்சயம் இல்லாத ஒன்றை நாடாதே? அப்படியெனில் இந்த நிரந்தர ஆசையும் நம்முள்ளே இருந்திருக்க வேண்டும் அல்லவா?

நமக்கு ஏற்படும் துன்பங்கள் இருவகையானவை. ஒன்று உடல் தொடர்பான நோய், பசி, தாகம் போன்றவை. மற்றது உள்ளம் தொடர்பான ஆசைகளால் உருவாவது. துன்பம் என்கிற சுழலின் அடிப்படை இந்த ஆசையே. யார் யார் அவாவினை விலக்கி வெற்றி கொள்கிறார்களோ அவர்கள் இந்தத் துன்பச் சுழலிலிருந்து விடுதலை பெறுகிறார்கள்

**(யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன் - திருக்குறள்)**

நமது அவாவினை முற்றிலும் விலக்கிவிடின் நமது இயல்பான ஆனந்தநிலை வெளிப்படுகிறது. இதை அடைவதே வாழ்வின் நோக்கம்.

ஹேமலேகாவின் இந்தத் தெளிவுரையைக் கேட்ட ஹேமசூடனின் மனம் தெளிவு பெறத் தொடங்கி, அவனுள் ஆன்மதாகம் எழுந்தது.

(மீண்டும் வரும்)

# இனிவரும் திருநாட்கள்

| 2019 | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 15 | செவ்வாய் | பொங்கல் |
| | 20 | ஞாயிறு | சின்ன சுவாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 23 | சனி | சுந்தரம் ஐயர் தினம் |
| மார்ச் | 04 | திங்கள் | மகா சிவராத்திரி |
| | 22 | வெள்ளி | ஸ்ரீ வித்யா ஹோமம் |
| ஏப்ரல் | 06 | சனி | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 13 | சனி | ஸ்ரீ ராம நவமி |
| | 14 | ஞாயிறு | தமிழ் வருடப் பிறப்பு |
| மே | 02 | வியாழன் | பகவான் 69 ஆவது ஆராதனை |
| | 28 | செவ்வாய் | மகா பூஜை (தாயார் ஆராதனை) |
| ஜூலை | 13 | சனி | பசு லட்சுமி தினம் |
| | 16 | செவ்வாய் | குருபூர்ணிமா |
| செப்டம்பர் | 01 | ஞாயிறு | அருணை விஜய தினம் |
| | 29 | ஞாயிறு | நவராத்திரி விழா தொடக்கம் |
| அக்டோபர் | 07 | திங்கள் | சரஸ்வதி பூஜை |
| | 08 | செவ்வாய் | விஜயதசமி |
| | 27 | ஞாயிறு | தீபாவளி |
| டிசம்பர் | 01 | ஞாயிறு | கார்த்திகை தீபவிழா தொடக்கம் |
| | 10 | திங்கள் | கார்த்திகை தீபம் |

# ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை

## ரமண சத்சங்கங்கள் பொள்ளாச்சி மற்றும் கோட்டூர் மலையாண்டிப்பட்டணம்

### *1.பொள்ளாச்சி*

*பகவான் ரமணர் அமர்வதற்காக அக்காலத்தில் சோபா வழங்கிய புதுப்பாளையம் ரங்கசாமி கவுண்டர் பேரன் திரு. ரமணகுமார் மற்றும் பகவானின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவரான வடிவுடையார் அவர்களின் பேத்தியுமான திருமதி. தமயந்தி ரமணகுமார் ஆகியோர்கள் தங்கள் இல்லத்தில் ரமண சத்சங்கத்தை மிகச் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். தங்கள் பாட்டனாரின் சமாதிகோயில் அமைந்துள்ள புதுப்பாளையத்தில் பகவானின் ஜயந்தி ஆராதனை விழாக்களை சிறப்பாக கொண்டாடி வருவதுடன் ஒவ்வொரு வாரமும் ஞாயிறன்று பொள்ளாச்சியில் அமைந்துள்ள சுப்ரமண்ய சுவாமி திருக்கோயிலில் சிறப்பாக பாராயணமும் பகவானின் நூல்களை பொருளுணர்ந்து வாசித்தலும் செய்து வருகின்றார்கள். இத்திருக்கோயிலை ஒட்டியே 2004 ல் ரமண ரதயாத்திரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக இவர்களால் ஸ்ரீரமண சந்நிதிமுறை முற்றோதல்கள் நடத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.*

### *2. கோட்டூர் மலையாண்டிப்பட்டணம்*

*கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலிருந்து ஆழியாறு போகும் வழியில் வருகிறது ஒரு சின்னஞ்சிறு கிராமமான கோட்டூர் மலையாண்டிப்பட்டணம்.*

*சுற்றி வால்பாறை, திருமூர்த்தி மலை, டாப்சிலிப் என்று சுற்றுலா பயணிகள் அடிக்கடி பயணிக்கும் இடங்கள். ஊரில் இறங்கி இந்த ரமண மகரிஷி பாடல்கள் புத்தகங்கள், படங்களை இலவசமாக தருகிறாரே கோட்டூர் பாலு என்று வினவினால் அன்பர்கள் அவருடைய இல்லத்திற்கே அழைத்துச் சென்று விடுவார்கள். ஆனால் அதற்கான அவசியமே இல்லாமல் செய்து விடுகிறார் இந்த ரமண பக்தர் நாம் வருகிறோம் என்று கூறிவிட்டால் போதும் கடை வீதியில் இருசக்கர வாகனத்துடன் காத்துக் கொண்டிருக்கிறார் நம்மை இன்முகத்துடன் அழைத்துச் செல்வதற்கு.*

*அவர் வீட்டிற்குள் நுழைந்தவுடன் ஒரு நிமிடம் ஏதோ ஒரு லாரி புக்கிங் ஆபீஸிக்குத் தான் வந்துள்ளோம் என்ற எண்ணம் வந்து விடுகிறது காரணம் மூட்டை மூட்டையாக அக்ஷரமணமாலை புத்தகங்கள் அடங்கிய குவியல்கள். மேலும் அங்கும் இங்குமாக பாக்கெட் சைஸ் (பல்வேறு) பகவான் படங்கள். இங்குதான் இவரால் 2005ல் இங்குள்ள அன்பர்களின் உதவியுடன் துவக்கப்பட்டது அக்ஷரமணமாலை சேவை மையம்.*

*எப்படித் தொடங்கியது இந்த அக்ஷரமணமாலை பயணம் என்று வினவியதற்கு? 1995 ஆம் ஆண்டு ஒரு பொது நூலகத்தில் பகவான் ரமணரின் இரண்டு புத்தகங்கள் இவரின் கண்களில் படுகிறது புரட்டி பார்த்து விட்டு அதை தம் இல்லத்திற்குப் படிக்க எடுத்துச் செல்கிறார். புத்தகங்களில் உள்ள ரமணாஸ்ரமத்தில் நிகழ்ந்த சம்பவங்களும் பகவானின் போதனைகளும் அவரை மிகவும் ஈர்த்துள்ளது. எந்த அளவிற்கு ஈர்த்துள்ளது என்று பார்த்தால் அந்த புத்தகங்கள் தொலைந்து விட்டது என்று நூலகரிடம் பொய் கூறிவிட்டு அவரே அப்புத்தகங்களை வைத்துக் கொள்கிறார். பின்னர் ஒரு முறை பொள்ளாச்சி கடை*

*வீதிகளில் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது அச்சமயம் வெளியாகியிருந்த திரு.இளையராஜா அவர்களின் ராஜாவின் ரமணமாலை பாடல் ஒலித்துக் கொண்டிருப்பது இவரது காதுகளில் விழுந்துள்ளது. பின்னர் அந்த கேசட் கடையை நோக்கி விரைந்துள்ளார். அந்த கேசட்டின் முகப்பில் திரு.இளையராஜா அவர்கள் பகவான் ரமணரின் (Welling Bust) புகைப்படத்தை வணங்குவது போல் உள்ள புகைப்படம் இவரை வெகுவாக ஈர்த்துள்ளது. இந்த புகைப்படத்திற்காகவே இந்த கேசட்டை வாங்கி அந்த புகைப்படத்தை அன்று முதல் தன்னுடைய சட்டைப் பையில் வைத்துக் கொண்டுள்ளார். அதன்பின் நாளிதழ்கள், வார இதழ்களில் பகவானைப் பற்றி வரும் செய்திகளை சேகரித்து வந்துள்ளார்.*

*பகவான் ரமணரின் 125 ஆம் ஆண்டு (2004) ஜயந்தி விழாவினை முன்னிட்டு ரமண ரத யாத்திரை நடைபெற்றது. அந்த ரத யாத்திரையின் முக்கிய குறிக்கோள் அக்ஷரமணமாலையை அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்ப்பது என்பதே. பொள்ளாச்சி பகுதி ரத யாத்திரை குழுவில் திரு. பாலு அவர்கள் இடம் பெற்று பொள்ளாச்சி சோபா கவுண்டரின் குடும்பத்தினரான திரு. ரமண குமார் திருமதி. தமயந்தி அவர்களுடன் சேர்ந்து பணியாற்றியுள்ளார்.*

*இந்த ரத யாத்திரையின் சமயத்தில் பகவானின் புகைப்படங்களும், அருணாசல அக்ஷரமணமாலை பாடல்கள் அடங்கிய குறுந்தகடுகளும் இவருக்கு கிடைத்துள்ளது. அந்நேரத்தில் அவருக்கு அக்ஷர மணமாலையின் பொருள் ஒன்றும் புரியவில்லை ஆனால் அந்த ராகம் இவரை வெகுவாக கவர்ந்துள்ளது. பகவான் இயற்றிய அருணாசல அக்ஷரமணமாலையை ஏன் நாமே அச்சிட்டு பல மக்களுக்கு இலவசமாக*

வழங்கக் கூடாது என்ற எண்ணம் இவருள் உதித்தது. ஆனால் யாரிடமும் சென்று இந்த புனிதப் பணிக்கு பணம் ஏதும் வாங்கக் கூடாது என்று கோரிக்கையை முன்வைத்தே இந்த பயணத்தை தொடங்கியுள்ளார். முதலில் A4 சைஸ் அளவில் நான்காய் மடித்த ஒரு சிறிய Pamphlet வடிவில் கொடுத்து வந்துள்ளார். பின்னர் கையடக்க புத்தக வடிவில் மாறியுள்ளது. அதன் பின்னர் தற்பொழுது அதே வடிவில் விளக்கவுரையுடன் வெளிவந்துகொண்டிருக்கிறது.

பகவானின் பக்தர்களின் இல்ல விசேஷங்களான திருமணமோ, கிரஹப்பிரவேசமோ அல்லது கடை திறப்பு விழாவோ ஏன் சமீப காலமாக பல அன்பர்களின் இல்லத்தில் யாரேனும் மரணத்தில் கூட அக்ஷரமணமாலை பாராயணம் செய்வதை காண முடிகிறது. இத்தகையோர் இவரிடம் இலவசமாக கையடக்க அக்ஷரமணமாலை புத்தகங்களை வேண்டிப் பெற்று பாராயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இவரிடம் இலவசமாக புத்தகங்களை பெறும் அன்பர்கள் பலர் தங்கள் வாழ்வில் பகவானின் கருணையால் ஏற்பட்ட அனுபவங்களை தொலைபேசியிலோ அல்லது கடிதத்தின் வாயிலாக பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தவுடன்தான் இவருக்கு பகவான் மேல் ஏற்பட்ட பக்தியும் பகவானுக்கு தான் எவ்வளவு அருகில் இருக்கிறோம் என்று உணர்வு வரத் தொடங்கியாதாக கூறுகிறார்.

மேலும் நூல்களைப் படிக்கும் போது புரிந்து கொள்ளமுடியாத பல விஷயங்கள், பகவான் அன்பர்களின் அனுபவங்கள், அவர்களால் பகிர்ந்து கொள்ளப்படும்போது தனக்கு பூரணமாக விளங்குவதாக கூறுகிறார்.

மேலும் இவர் இந்த புத்தகம், புகைப்படங்கள் விநியோகம் மட்டுமில்லாது வருங்கால சமுதாயமும் பகவானின் போதனைகளை எளிதில் புரியும் வண்ணம் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆன்மிக வகுப்புகள் அக்ஷரமணமாலை, உபதேச உந்தியார், ஆகியவற்றை பொருளுணர்ந்து பாராயணம் செய்ய ஆன்மிக சான்றோர்களைக் கொண்டு பயிற்சி அளித்து வருகிறார்.

இத்தொண்டானது அருகில் உள்ள வால்பாறை போன்ற மலைப்பிரதேசங்களில் அமைந்துள்ள தொலைதூர கிராமங்களிலும் இம்மையத்தின் வாயிலாக செய்து வருவது போற்றத்தக்கது.

திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் 2016 ஆம் அவருடைய தலைப்பகுதியில் ஏற்பட்ட ஒரு கட்டியை அறுவை சிகிச்சை மூலம் அகற்ற மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். ஆனால் 99% அவர் பிழைப்பது கடினம் என்று கூறிய சிகிச்சையை மருத்துவர்கள் தொடங்கியுள்ளனர். பகவான் மீது பாரத்தை போட்டு அவரும் சிகிச்சைக்கு ஒத்துழைப்பு தந்துள்ளார். அதனால் பகவானின் பரிபூரண கருணையால் அவர் பிழைத்துக் கொண்டார்.

பொள்ளாச்சியில் ஒரு அரசு உதவி பெறும் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த பாலசுப்ரமணியம் அவருடைய ஊதியத்தில் ஒரு பகுதியை அக்ஷரமணமாலை நூல்களை அச்சடிக்க பயன்படுத்தி வந்துள்ளார். தற்காலத்தில் பல அன்பர்கள் அக்ஷரமணமாலை புத்தகங்களை அச்சிடுவதற்கு உதவி செய்யத் துவங்கியுள்ளது மேலும் இச்சேவையை இந்த மையம் செவ்வனே செய்ய ஏதுவாக உள்ளது. அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம் பகவான் ஜயந்தி, ஆராதனை தின விழாக்களை திருவாசகம்

மற்றும் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் இப்பகுதி பொதுமக்களுடன் கொண்டாடி வருகின்றது.

அக்ஷரமணமாலை புத்தகங்கள் வேண்டுவோர் இந்த சேவை மையத்தினை தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: திரு. பாலசுப்ரமணியம், 9965622878.

ஸ்ரீ ரமணார்ப்பணம்.

# ஸ்ரீஅருணாசல அக்ஷரமணமாலை தோற்றம்

பகவான் காலத்தில் தினந்தோறும் நகரினுள் சென்று பிக்ஷை எடுக்கும் சாதுக்கள் பலர் பகவானது அடியார்களாக இருந்த சமயம் அது. திருவருணையைச் சார்ந்த ஏனைய சாதுக்கள் மகரிஷியைச் சார்ந்த அடியார்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டு பிக்ஷைபெற்றுச் செல்வோராயினர். மற்றையோரிடமிருந்து தம்மை மகரிஷியைச் சார்ந்தோராகப் பிரித்துக் காட்டுவதற்கும் பிக்ஷை இடுவோரின் ஆன்ம விளக்கத்திற்காகவும் பிக்ஷைக்குச் செல்கையில் இசைப்பதற்கு ஏதுவான பாடல் ஒன்றை இயற்றித் தரும்படி பகவானது அடியார்கள் விண்ணப்பிக்க, ஏற்கெனவே நாயன்மார்களது தேவாரம் பெருமளவில் இருப்பதாகக் கூறி மறுத்துவிட்டார் பகவான்.

திருவருள் கைகூட, ஒருநாள் கிரிவலம் செய்யும்போது பகவான் ஆங்காங்கே அமர்ந்து, தனக்கும் அருணாசலனுக்கும் இடையே ஏகாந்தத்தில் நிகழ்ந்த அதிசயத்தை பக்திப் பரவசத்துடன், 108 மந்திரங்கள் அடங்கியதான இந்நூலை எழுதியருளினார். இதற்குப் பொருள் என்ன என்று ஸ்ரீ பகவானிடம் கேட்டபோது அதற்குப் பொருள் அதைப் பாராயணம் செய்வதுதான் என்று கூறியருளியுள்ளார். எனவே அக்ஷரமணமாலைக்குச் சரியான விளக்கம் தருவது இயலாத காரியம். அவரவர் பக்திக்கு ஏற்ப, இப்பாடல்களின் பொருளை ஒருவாறு உள்ளுணர்வால் பெறமுடியும். தனது மற்ற உபதேசப் பாடல்களுக்கு பலமுறை விளக்கம் அருளிய பகவானிடம் அக்ஷரமணமாலைக்கும் விளக்கம் வேண்டியபோது, அவை சிந்தனை செய்து எழுதப்பட்டவை அல்ல, நீங்களே விளக்குங்கள் கேட்கலாம் என அருளியுள்ளார் என்பது இங்குக் கவனிக்கத்தக்கதாம்.

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹன்

### ஆசிரம காண்டம்

*வெப்பம் குடிதண்ணீர் சொற்பம், விருபாட்ஷி*
*அப்பனைக் காண்போர்க்(கு) அவஸ்தையாம் தப்பிட*
*மாசிரமப் பட்டு மகானுக்காய் கந்தனென்போன்*
*ஆசிரமம் கட்டினான் அங்கு....(219)*

*[விருபாட்ச குகையில் கோடைக்காலத்தில் வெப்பம் மிக அதிகம்; தண்ணீர் கிடைப்பதும் மிக அரிது. பகவானைக் காணவரும் அடியார் சிரமப்படுவதைக் கண்ட கந்தசுவாமி ஸ்கந்தாஸ்ரமக் குடிலை நிர்மாணித்தார்.]*

*கண்ணை மறைக்கின்ற கள்ளிப் புதரகற்றி*
*தென்னை மரம்வைத்து தோட்டமிட்டான் மண்ணிலவன்*
*ராமன் குகனாய் ரமணருக்கு வந்தகந்தன்*
*நாமம் நினைவில் நிலைப்பு....(220)*

*[அங்கிருந்த புதர்களை எல்லாம் அகற்றி தென்னைத் தோட்டம் அதைத்தார். ராமபிரானுக்கு குகன் வந்து சேவை செய்ததுபோல பகவானுக்கு கந்தஸ்வாமி சேவை செய்தார்.]*

*கந்தன் குடிலுக்கு வந்தாறாம் ஆண்டினில்*
*தன்தாய் தளர்ந்திடத் தாயுமானார் தந்தார்*
*நடுபுகுந்த கூற்றை நகர்ந்திடக் கூறி*
*மடிசுமந்து மோட்ச மகிழ்வு....(221)*

*கந்தாஸ்ரமத்துக்கு வந்த ஆறாம் ஆண்டில் அன்னை மிகச் சுகவீனம் அடைந்து உயிர்போகும் நிலையில் இருக்க, தாயுமானாராம் பகவான் அந்த யமனை விலக்கி, அன்னைக்கு உடல் நலம் தந்தார்.*

*தோன்றும்நான் சொப்பனமே ஆராய*
*அப்புளுகன் ஆட்டம் அடங்குமாம் அப்பளப்*
*பாட்டினால் அன்னைக்கு ஊட்டினார் ஞானச்சாப்*
*பாட்டினை சூடாய்ப் பொரித்து....(222)*

*['நான்' என்னும் அஹங்காரம் நமது கனவு நிலைபோல் மெய்யற்றது. ஆத்மா ஒன்றே சத்யம். இந்தப் பேருண்மையை அப்பளப் பாட்டின் மூலம் பகவான் அன்னைக்கு விளக்கினார்.]*

*விலாநோக தன்னை வயிற்றில் சுமந்தோள்*
*உலாவந்த தேகம் உதிர்ந்திட பலாக்கொத்தில்*
*மூர்த்தியாய் மாபலி தீர்த்தக் கரைதனில்*
*சேர்த்தார் சமாதி சமைத்து....(223)*

*[அன்னை தேகவியோகம் அடைந்தபின்னர் பாலிதீர்த்தக் கரையில் அன்னைக்கு மாத்ருபூதேஸ்வரர் ஆலயம் அமைத்தார்.]*

*உன்னை வெறுக்கலாம் தன்னை மறக்கலாம்*
*அன்னை துறத்தல் அவமன்றோ கண்ணை*
*இமைகள் அணைக்க நமையாள் உறக்கம்*
*சுமையா சுவர்கமா சொல்....(224)*

*[தன்னை மறந்தாலும் அன்னையை மறக்க முடியாது. அமையா உறக்கம் என்பது சுவர்க்கமா?]*

*அராப்பள்ளி மாலன் சிராப்பள்ளி ஈசன்*
*இராப்பகல் நூற்போன் இணைந்த இராப்பள்ளி*
*நாதன்தன் தாய்க்களித்தான் பாதுகாவ லாய்மாத்ரு*
*பூதனை லிங்கம் பிடித்து....(225)*

## மாத்ருபூதேஸ்வரர் ஆலயம் அமைத்தல்

*தாயார் சமாதி தரிசிக்க வந்தவர்க்கு*
*ஆயாச மாலும் அடியார்ள் பாயாசம்*
*நோக்கி எறும்புகள் போக்காய்ப் படையெடுக்க*
*ஆக்கினார் ஆசிரமம் அங்கு....(226)*

*[ஏராளமான அன்பர்கள் மாத்ருபூதேஸ்வரர் ஆலயம் நோக்கி வருதல்.]*

*எந்தசக்தி என்னை எமனெதிர்க்க வைத்ததோ*
*அந்தசக்தி தானிங்(கு) அழைத்தது வந்தபின்*
*அங்கிங்(கு) ஆசிரமம் ஆனாற்போல் ஆனதென்றார்*
*தங்குமிடம் தாயார் தயவு....(227)*

எந்த ஒரு தெய்வீக சக்தி என்னை மரணஆய்வு நிகழ்த்தச் செய்து ஞானோதயம் ஆக்கியதோ அதுவே என்னை அருணாசலத்திற்கு அழைத்து வந்தது. இந்தச் செயல்கள் அனைத்தும் அவன் செயலே என்றார் பகவான்.

*ஓலை சமாதியின் ஓரமாய்க் கட்டிய*
*சூளையில் வேகாத செங்கல்லால் ஆலயச்*
*சுற்றுச் சுவரெழுப்பக் கற்றுக் கொடுத்தாராம்*
*அற்றைக்கு ஞானச்சித் தாள்....(228)*

*ஆகமச் சொற்படி அடிக்கல் , புனிதநீர்*
*சாகர கங்கை அபிஷேகம் ஸ்ரீகரர்*
*நேராய் நுழைந்து நிறுவிஸ்ரீ சக்கிரத்தை*
*ஆராதித் தாரங்(கு) அமர்ந்து....(229)*

ஆகமப்படி அமைந்த அந்த ஆலயத்தின் கருவறையில் நுழைந்த பகவான் அங்குள்ள ஸ்ரீசக்ரத்தைத் தன் கையாலேயே பற்றி ஆராதித்தார்.

*ஆயிரம் ஆலயம் ஆயினும் அண்ணலின்*
*தாயிற் சிறந்ததோர் கோயில்லிலை தூயயிச்*
*சேதியைச் சாதகர் சாட்விக் எனப்பட்ட*
*சாதரு ணாசலா சொல்....(230)*

*ஆசான் அனுமதிக்க ஆசிரம அன்பர்கள்*
*காசோலை தந்திட கட்டுமானம் கோசாலை*
*சான்றோர்க்கு நூற்சாலை சாதக சாதுக்கள்*
*போன்றோர் புகலிடம் பின்பு....(231)*

*விருந்து சமைக்க விருந்தினர் தங்க*
*விரிந்திட ஆசிரமம் விண்ணாய் நிரஞ்சனா*
*நந்தர் பொறுப்பேற்று நிர்வாகம் செய்யநிச்*
*சிந்தையாய் நாதர் சதம்....(232)*

மேஜர் சாட்விக் போன்ற அன்பர் உதவியுடன் கோயில், கோசாலை, பக்தர் தங்கும் அறைகள், நூலகம் போன்றவை உருப்பெற்றன. ஸ்வாமி நிரஞ்சனானந்தர் சர்வாதிகாரியாய்ப் பொறுப்பேற்ற அனைத்தையும் அழகுற வழிநடத்தினார்.

*முகவையார் கண்ண முருகனார் பிள்ளை*
*அகவையில் ஆசு கவியாய் பகவனை*
*தேனிக்(கு) இணையாய் திருவாச கித்தானார்*
*மாணிக்க வாசக மாய்....(233)*

முகவைக் கண்ண முருகனார் சிறுவயதிலேயே ஆசுகவி மணிவாசகரின் திருவாசகம்போல் பகவான்மீது ஸ்ரீரமணசந்நிதி முறை போன்ற நூல்களைப் புனைந்தார்.

*மணமாலை தந்த க்ஷரமண மாலை*
*மனமாயை கொண்டுழலும் மாந்தர் குணம்மாய்க்கும்*
*நானாரை தன்மருக நானார்க்(கு) அளித்தமாம*
*னானாரால் மாற்றம் நிகழ்வு....(234)*

[முருகனாரின் மாமனார் தண்டபாணி ஸ்வாமியும் பகவானின் சீரிய பக்தர்களில் ஒருவர்.

*எதானாலும் என்றும் யதார்த்தத்தில் நீந்தும்*
*சதாசர்வ சாந்த சிவனை கதாநாத*
*காந்தனைக் கண்ட கனிமம் முருகனார்*
*நான்தனைத் வென்றதன் நாள்....(235)*

பகவானின் முதல் தரிசனமே முருகனார்க்கு ஞான எழுச்சியை உண்டாக்கியது.

*கையிலென்ன காயிதம் கேட்ட ரமணரிடம்*
*அய்யநின் பேரில் அடியேனின் செய்யுளென்ற*

*ஆசுகவி வாக்கினை அங்கீ கரித்தவரை*
*ஆசிகவி ஆக்கினார் அன்று....(236)*

*மாசிகரம் மாதுமையாள் பூசிக்கும் ஆசுரரை*
*வாசகர்தம் பாசுரத்தால் விட்டன்று ஈசன்*
*பெருந்துறை வந்தாற்போல் பேதையிவன் பாக்காய்*
*இருந்தயிறை யேரமணா இன்று....(237)*

*[திருப்பெருந்துறையில் மணிவாசக வாக்கினை திருவாசகமாய் சிவபெருமான் கேட்டு மகிழ்ந்ததுபோல், அண்ணாமலையில் முருகனார் பாடல்களை பகவான் கேட்டு மகிழ்ந்தார்.]*

# ஆசாமி இல்லை

*ஒருசமயம் ஜுபிலி கொட்டகையில் ரேடியோ பாடிக் கொண்டிருந்தது. நிகழ்ச்சி முடிந்ததும் பாடியவர்களின் பெயர், பக்கவாத்தியக்காரர்களின் பெயர் கூறப்பட்டது. அதைக் குறிப்பிட்டு பகவான் ரேடியோ பாடுகிறது! பேசுகிறது! பாடியவர் பேசியவர் பெயர்களையும் அறிவிக்கிறது. ஆனால், அந்தப் பெட்டிக்குள் ஆள் ஒருவருமில்லை. அதைப்போல்தான் நம்ம இருப்பும், ஆகாயம்போல் இருக்கிறது. இந்த உடம்பு ரேடியோவைப் போல் பேசினாலும் உள்ளே ஆசாமி இல்லை என்று தன் சுவானுபவத்தை விளக்கினார்.*

*மேலும் தொடர்ந்து, கால தேசங்களும் கற்பனையே தவிர, உண்மையில் இல்லை. ஹைதராபாதிலோ சென்னையிலோ பாடுவதை நாம் இங்கிருந்தபடியே அதே நேரத்தில் ரேடியோவில் கேட்கிறோம். அதன் அர்த்தமென்ன? பேதமில்லை என்பதைத் தானே காட்டுகிறது! என்றார்.*

*- நினைவில் நிறைந்தவை நூலிலிருந்து*

# எல்லா மைலார்ட்

## வி.நிரஞ்சன்

*தன்னை மறந்து தனுவே தானாய் எண்ணி*
*எண்ணில் பிறவி எடுத்து இறுதி தன்னை*
*உணர்ந்து தான் ஆதல் உலக சஞ்சாரக்*
*கனவின் விழித்தலே காண்*

எளிமையான பாட்டு. பொருளோ வெளிப்படை. பகவானின் உபதேசம் அத்துணையும் உள்ளடக்கம். தன்னை மறத்தல், தனுவே தானாய் எண்ணல், எண்ணில் பிறவி எடுத்தல், பக்குவ முதிர்ச்சியில் இறுதியாகத் தன்னை உணர்ந்து தான் ஆதல்: மீண்டும் மீண்டும் பிறக்கின்றோம், மீண்டும் மீண்டும் இறக்கின்றோம், மீண்டும் மீண்டும் போகப்பொருள்களை நோக்கி ஓடுகின்றோம், பெற்றாலும் நிம்மதி இல்லை, பெறாவிட்டலோ சுகம் இல்லை, வாழ்க்கையின் முடிவில் எல்லாம் அநித்தியம், எல்லாம் அசத்தியம், எல்லாம் துக்கமயம். தேகாபிமானம் கொண்டு இப்படி ஒரு பெருந்துயரை மாளாப் பிறவிகளில் ஓயாது அனுபவித்துகொண்டு வெந்துமடிகின்றோம். இது ஒரு பெருங்கனவு. இக்கனவிலிருந்து எப்படித்தான் விழிக்கப் போகின்றோமோ?

உறங்கிக் கொண்டிருக்கும் யானையின் கனவில் திடீரென்று சிங்கம் ஒன்று தோன்ற, பீதியால் திடுக்கிட்டு யானை விழித்துக் கொள்கிறது. தேகாபிமானக் கனவு கண்டு கொண்டிருக்கும் ஜீவன் அக் கனவு சுகமாக இருக்கும் வரையில் அதனின்று விழித்துக் கொள்ளமாட்டான். சிங்கத்திற்கு ஒப்பான குரு ஒருவரே வாழ்க்கை என்னும் நீள் துயிலில் சுகித்தும் துக்கித்தும் கனவு கண்டு கொண்டிருக்கும் அஞ்ஞானி ஒருவனைத் தனது வல்லபத்தால் விழிப்பித்து அவனைத் அவனது

சொரூபத்தில் நிலை கொள்ளச் செய்பவர். இப்படியாகச் சற்குருவின் பெருமையை விளக்கு கின்றார் கண்ணுடைய வள்ளலார்.

இக் கருத்தை ஒட்டி, ஒருவனை விழிக்க வைக்கும் அதிர்ச்சி தரும் கனவுகள் பற்றி பகவான் கூடுதல் விளக்கம் அளிக்கின்றனர். ஒருவனுக்கு ஒரே கனவில் விழிப்பு நிகழ்வதில்லை. அதிர்ச்சிதரு கனவுகள் அவ்வப்பொழுது தோன்றிக்கொண்டே இருக்கும். இருந்தும் அவை ஒருவனைக் கனவிலிருந்து நிரந்தரமாக மீட்கமுடியாது போகும். இப்படிப் பல அதிர்ச்சி தரும் கனவுகள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்துகொண்டே இருந்து பின் ஒரு பெருங்கனவு அவனை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி நிரந்தரமாகவே கனவிலிருந்து மீட்கும். அது தான் குருவருளோடு கூடிய முக்தியாகும். இவ் விளக்கத்தை சூரி நாகம்மாவின் கடிதங்களில் காணலாம்.

*Suffering is the way to realization* என்று யோகானந்த பரமஹம்சரிடம் பகவான் அறுதி இட்டுச் சொல்வது இவ் விளக்கத்தை உள்ளடக்கியது. வாழ்க்கை சுகமாய் இருக்கும் வரை தேகாபிமானம் வலுத்துகொண்டே தான் போகும். தோல்வி, தாழ்மை, ஏழ்மை, வலுவின்மை, அவமானம், அவமதிப்பு, இழப்பு, கேலிக்கு இலக்காதல், மன நிம்மதி அறல், நோய், பிணி, மரணம் இவ்வாறு உடல் மன வலிகள் மிகும் பொழுதுதான் ஒருவன் தனது இச்சா சுதந்திரத்திற்கும் மதியூகத்திற்கும் அப்பாற்பட்டு ஒரு சக்தி தன்னை இயக்கிக் கொண்டிருக்கின்றதை சற்றே உணரத் தலைபடுகின்றான்.

மேலும் எல்லாப் பெருமைகளையும் மரணம் முடித்துவிடுகிறது, காலனே வல்லோன் என்று உணருகின்ற பொழுதிலேதான், மரணத்தை வெல்வது மரண பயத்தை வெல்வது ஒன்றே நிரந்தர நிம்மதி என்னும் உறுதியுடன் அவன் ஞான குரு ஒருவரின்

சன்னிதியை நாடுகின்றான். தன்னை அறிவது ஒன்றே மரணத்தை வெல்வது என்றும், பவபந்த துக்கத்தில் இருந்து மீள்வது என்றும் குருவருளால் அறிகின்றான். நாளடைவில் குருவின் சன்னிதியில் தன்னொழிவு இல்லாத அகந்தை ஒடுக்கத்தில் இவ் உண்மை அவனுக்கு உணர்வாய் விளக்கமாகின்றது.

நாம உருச் சித்திரமும் பார்ப்பானும் சேர் படமும் ஆர் ஒளியும் அத்தனையும் தான் ஆம் அவன் என்னும் உள்ளது நாற்பது முதல் பாடலுக்கு இணங்க, ஜகஜீவ ஈசுவரர் என்னும் மும் முதலுக்கும் முதலாய் விளங்குவது ஞான குருவின் சன்னிதி, அதுவே அகம் என்னும் சொற்பொருளாம். அதுவே ஜீவனின் சொரூபமும் ஆம். ஆன்ம குருவின் சன்னிதியின் மாண்பை மனதாலோ வாயாலோ விவரிக்கமுடியாது.

எங்கே சற்குருவின் சன்னிதி நிகழ்ந்து கொண்டிருக்கின்றதோ, எங்கே சற்குருவின் உபதேசம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றதோ, அங்கே முனிவரும் சித்தரும் தேவரும் கந்தருவரும் பிறர் கண்களுக்குப் புலப்படாமல் ஏதேதோ உருவங்களில் அணுகி இருப்பர் என்று பகவான் ஒரு சமயம் விசுவநாத சுவாமியிடம் கூறியுள்ளார். ஞான குருவின் ஒவ்வொரு உரையும் அவரது சன்னிதியும் அவ்வளவு மாட்சி மிக்கவை.

விலங்குகள், பறவைகள், வளர்ப்புப் பிராணிகள் முதலிய உயிர்களும் கூட ஞான குருவான பகவானின் சன்னிதியில் உய்வடைந்திருக்கின்றன. பகவானின் சன்னிதியில் விளையும் பயன்கள் அளவிலாதவை. மனம் நல்வழிப் படுகின்றது, உள்முகமாகின்றது, நிட்டையுறுகின்றது, நிட்டை திடமாகின்றது, சித்தம் சித்தாகின்றது. பகவானது அருளால் முக்திப் பேறு அடைந்தவர்கள் அன்னை அழகம்மையும் பசு லட்சுமியும் மட்டும் இல்லை; எத்துணையோ ஜீவர்கள்


எல்லா மைலார்ட்

நமக்குத் தெரியாமலே பவபந்த முக்தி பெற்றிருக்கவேண்டும்.

இறைவனும் குருவும் அருளும் ஆன்ம சொரூபமும் ஒரு பொருளே என்பது பகவானின் துணிபு. பகவானின் சன்னிதிக்கு உலகின் பல்வேறு திக்குகளில் இருந்து பக்குவிகள் ஈர்க்கப்பட்டிருக்கின்றனர். பகவானின் சன்னிதியில் தம் வயம் இழந்து சொரூப வயப்பட்டு சாந்தமாகி ஆனந்த அனுபூதி பெற்று வாழ்வில் பெரும் திருப்பம் அடைந்தவர்கள் எண்ணிலாதவர்கள்.

அவர்களில் இருவர் இங்கே குறிப்பிடப்படுகின்றனர். ஒருவர் ஜி.ஹைச். மீஸ். இவர் நெதர்லாந்து நாட்டினர். கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழக ஆய்வாளர். சமூகமும் தர்மமும் என்னும் தலைப்பில் எட்டு ஆண்டுகள் நீண்ட ஆய்வு செய்தவர். தர்ம நியதிகளுக்கு மதம் மூல வேராக இருப்பதை உணர்ந்து உலகில் பரந்துபட்ட பெரிய மதங்களை ஆய்வு செய்தவர். இது தொடர்பாக இந்திய பழம்மறைகளின் தத்துவங்கள் குறித்து பல கேள்விகளுக்கு விளக்கம் காண முடியாமல் இருந்த நிலையில் மாரிஸ் ஃப்ரைட்மனால் பெங்களூரிலிருந்து திருவண்ணாமலைக்கு வழிகாட்டப்பட்டவர்.

டி.கே.சுந்தரேச அய்யரின் மகன் பானு சர்மா என்பாரோடு பகவானின் சன்னிதிக்கு வந்து அமர்கின்றனர். நெடுநேரம் அமர்ந்தவாறு அமைதியாய் விட்டார். கேட்கப்பட வேண்டிய கேள்விகள் இருக்கின்றன என்று பானு சர்மா அவரை நினைவு படுத்தியவாறு இருந்தார். ஆனாலும் மீஸ் ஒரு வார்த்தை பேசவில்லை. ஆம். பகவான் சன்னிதியில் கேள்விகளில்

பல உறுதி குலைந்து மறைந்துவிட்டன. மேலும் பல கேட்கப்படாமலே தெளிவு பெற்றுவிட்டன.

மீஸ் அகப் புரட்சிக்கு உள்ளானார். செல்வச் செழிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். ஏழு இருக்கைகள் கொண்ட காரில் பயணத்திற்கு வேண்டிய பொருள்களோடும் பணியாளர்களோடும் பயணம் செய்துவந்தார். பகவானது சன்னிதி மாண்பால் அவர் தனது தேவைகளையும் பணியாளர்களையும் துறந்தார். சாது ஏகரசா என்கின்ற நாமத்தோடு கூடி ஒரு துறவியாகவே ஆகிவிட்டார். மூன்று ஆண்டுகள் பகவானது அடியையே புகலிடமாகக் கொண்டார். தோற்றத்திலும் அவர் மாறுதல் அடைந்திருந்தார். சாது ஏகரசாவை சில சமயம் பகவான் அன்போடு சாஸ்திரி சுவாமி என்று அழைப்பது உண்டு.

பகவானது அருணை விஜய பொன் விழா நினைவு மலரில் அவரது கட்டுரையே முதலாவதாக அமைகின்றது. சிறப்பான அந்தக் கட்டுரையின் முதல் வாக்கியம் இவ்வாறு அமைகின்றது: இந்த உலகில் அரும் பெரும் சாதனையைச் சாதித்துவிட்டு ஒருவன் பகவானது சன்னிதியில் வந்து அமர்ந்தால், ஆத்ம ஞான ஸ்திதியில் சதா இருந்துவரும் பகவானின் சாதனையோடு ஒப்பிடுகையில் தனது சாதனை ஒன்றுமே இல்லை என உணர்வான்.

அஷ்டமாசித்திகளும், பொன்னுலகத்தின் தலைமையும், திரிபுவனங்களின் ஆட்சிப்பேறும், ஞான குருவினுக்குத் திரணம் போல்பவை. அடையவேண்டியது என்று ஒன்றுமே இல்லை என்னும் நிலையில் உள்ள ஞான குருவின் உயர்விற்கு ஈடு இணை எதுவுமே இல்லை. ஞானியும் ஞானமும் இரு வேறு இல்லை, ஞானி ஞானமேயாம் என்றும் பகவான் உறுதிபடுத்தி உள்ளனர்.

எல்லா மைல்லார்ட் என்னும் சுவிஸ் பெண்மணி 36 வயதிற்குள்ளாகவே அதி தீவிர சாதனைகளைச் சாதித்தவர். 1930-களிலேயே பெண்களின் மத்தியில் சாதனை வீராங்கணையாகத் திகழ்ந்தவர். அவரைப்போல் சுதந்திரமாகச் செயல்படவேண்டும், தனித்து நின்று வெற்றி பெறவேண்டும், இடை ஊறுகளை மன உறுதியோடு வென்று கடக்கவேண்டும் என்று இளம் தலை முறையினர் ஆர்வப்பட ஒரு வழிகாட்டியாக இருந்தவர். அபாயகரமான, உயிர்க்கு அச்சுறுத்தும் ஆபத்தான இக்கட்டுகள் பலவற்றை எதிர்கொண்டு ரஷ்யாவின் கிழக்குப் பகுதிகளிலிருந்து ஆசியாவின் கிழக்குக் கடலோர எல்லை வரை பெரும்பாலும் தனித்தே எவ்விதப் பாது காப்பும் இன்றி நடந்தும் குதிரை, ஒட்டகங்களின் மீது ஏறியும் வெளி உலகு இது வரை ஏதும் அறிந்திராத இருண்ட நிலப்பரப்புக்களிலும் மக்கள் சமூகத்திலும் பல முறை பயணித்து தான் நேரில் கண்ட செய்திகளை வெளி உலகிற்குப் பயணக் கட்டுரைகளாகவும் பின்னர் நூல்களாகவும் வெளியிட்டு ஐரோப்பிய சமூகத்தை பெரும் வியப்பில் ஆழ்த்தியவர் எல்லா.

அவரது நான்காவது பெரும் பயணம் இன்னொரு பெண் சாதனையாளரோடு இணைந்து ஜெனிவாவிலிருந்து ஃபோர்ட் காரில் புறப்படுகின்றது. ஒரு புறம், வெளிமுகப் பயணம்; மறு புறம், கூடக் கார் ஓட்டி வரும் இளம் பெண் சாதனையாளரை, மன நலம் குன்றி போதைக்கு அடிமை ஆகி நிலை குலைந்து போன, மதியூகம் மிக்க சிறந்த எழுத்தளரான அவரை, போதையினின்று மீட்க உறுதிகொண்ட எல்லாவின் அகமுகத்தே நிகழ்கின்ற பயணம். மன விடுதலையையும் மனச் சாந்தியையும் தேடி அலையும் உணர்வு பூர்வமான எல்லாவின் பயணம்.

எப்படியும் என் சினேகிதியை போதையின் பிடியிலிருந்து மீட்பேன், என்று கிளம்பிய எல்லாவின்

உறுதி பொய்த்துப் போனது. அந்த இளம் சாதனையாளர் ஆஃப்கனிஸ்தானில் எல்லாவை விட்டுப் பிரிந்தபின், இந்தியாவிற்குப் பயணம் ஆகி, தெற்கு முகமாகி பகவான் ரமணரின் சன்னிதியை அடைகின்ற எல்லா பெறுகின்ற முதல் அகவிளக்கம் பின் வருமாறு:

மிகுந்து ஒளிரும் அவரது கண்களில் கனிவும் அமைதியும் தெரிந்தன. எங்கள் இருவரிடையிலும் நிலவிய மோனம் அவ்வளவு நிறைவுடையதாய் இருந்தது; அதன் விளைவாக எனது இதயத்தில் ஒரு வால்வு கீறுபட்டது போல் ஆயிற்று. அது ஒரு சூனியத்தை, முழுமையான வெறுமையை, உண்டாக்கியது. இந்த மனிதர் உருவகிக்கும் மெய் ஞானத்திற்கு நான் அழைக்கப்பட்டது போன்ற உணர்வின் செறிவால் நான் தேடிக்கொண்டிருக்கின்ற அடிப்படைக் கேள்விக்கான பதில் இவருடைய சூழலில் காணக் கிடக்கின்றது என்று அறிந்தேன். இதுகாறும் வெளிமுகப்பட்ட எனது ஆய்வுப் பயணங்கள் பிறவியின் உண்மை நோக்கத்தை தெளிவு படுத்தும் மெய் ஞானத்தின் விளிம்பிற்கு என்னைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டன.. உண்முகப் பயணம் ஒன்றே மெய்வாய்ப்பட்டது.

எல்லாவின் வெளி முகச் சாதனைகள் தனிச் சிறப்பை இழந்துவிட்டன. ரமண சன்னிதியில் அவரை உள்முகப்படுத்தும் பயணத்திற்கு வழிவகுத்து உதவின. எல்லா அண்ணாமலையார் கோவிலுக்கு தெற்குப் பக்கத்தில் உள்ள தெருவில் மாதம் ஐந்து ரூபாயில் ஒரு வீட்டில் தங்கலானார். பகல் பொழுது பகவானுடைய சன்னிதியில் இருப்பார். மதிய உணவை பகவானுக்கு அருகில் இருந்து உண்பார். அங்கேயே குளித்துவிட்டு மாலையில் வீடு திரும்புவார்.

பால் பிரண்டனின் கட்டுரைகளைப் படித்து பகவானது உன்னத நிலையை நன்கு அறிந்து

கொண்டுதான் எல்லா பகவானை நாடியிருந்தார். வார்த்தை அளவில் பகவானுடைய அறிவுரைகளைப் புரிந்து கொள்வது முதற் கட்டம், அதன் பின்னர் நாம் எதைப் புரிந்து கொண்டிருக்கின்றோமோ அதுவாகவே ஆகிவிடுவது தான் இலட்சியம் என்பதை நன்கு அறிந்தது கொண்டார் எல்லா.

நான் இந்த உடல் இல்லை, மனம் இல்லை, பூரண உணர்வே என்று பாவிப்பதால் உடல் உணர்வு, மன உணர்வு, நீங்கி பூரண உணர்வாகி விடமுடியாது. வெளிமுகமாய் இருக்கின்ற மனதின் கவனத்தை மாற்றி உடல் உணர்வினின்றும் திருப்பி அதை உள் முகமாக்க வேண்டும். பின்னர் எண்ணங்களாய் வெளிமுகப்பட்டுக் கொண்டிருக்கும் மனதின் கவனத்தை அந்த எண்ணங்களைக் கவனியாது விடுத்தலால் எண்ணங்கள் நீங்கிய நிர் விஷய சுத்த மனதாக்கி நிலை பெறல் வேண்டும்.

எண்ணங்கள் அற்ற சூனிய மனமே ஆன்ம சொரூபத்தின் நுழைவாயில். இந்தப் பயிற்சியைத் தான் பகவான் ஆத்மவிசாரம் என்பர். ஆத்ம விசாரம் என்பது நான் யார் என்று சதா கேட்டுக் கொண்டிருப்பது இல்லை; அது மனதை ஆன்மாவில் சதா வைத்திருப்பது என்பார் பகவான். எவை எல்லாம் நாம் அல்லவோ அவற்றை நாம் நீக்கி விட்டால் மிஞ்சி இருப்பது நம் சொரூபம் என்பர் பகவான்.

இந்த ஆன்ம விசாரப் பயிற்சி என்பது அதிதீவிர சாதனை. இந்த சாதனையில் உடல் பொறி உள்ளம் உயிர் இருள் எல்லாம் ஆகுதியாகக் கொடுக்கப்படவேண்டும். இதை எல்லா நன்கு விளங்கிக் கொண்டார்.

ஆதலால் ஒரு வாரம் தங்குவதற்குப் பதிலாக மூன்று மாதங்கள் தங்கினார். மேலும் மேலும் உள் முகமாகிக் கொண்டிருக்கின்ற பயிற்சி பகவானின் சன்னிதியில் எவ்வளவு அருள்பாலிக்கப் படுகின்றது

என்பதை உள்ளுணர்வால் நிச்சயித்தார். தொடர்ந்து தங்கி வரலானார். நாட்கள் மாதங்கள் ஆயின; மாதங்கள் வருடங்கள் ஆயின. 1940ல் பகவானை நாடி வந்தவர் 1945ல் தான் ஜெனிவாவிற்குத் திரும்பினார்.

எல்லாவின் மன மாற்றம், அகமுக நாட்டம், விசாரம் அனைத்தும் அவருடனே நிலைத்தன.

எல்லா ஆஃப்கனிஸ்தானை விட்டு இந்தியாவிற்குப் பயணம் ஆன சமயம் இரண்டாம் உலகப் போர் துவங்கிவிட்டது. எல்லாவின் அருணை வரவிற்குச் சற்று முந்திய காலத்தில் மெர்சிடிஸ் டி அகோஸ்டா என்னும் மாது அமெரிக்காவிலிருந்து பகவானைத் தரிசிக்கவேண்டும் என்கின்ற ஒரே சிந்தனையோடு வந்து சேருகின்றார். தனது ஐயங்களுக்கு பகவானிடம் இருந்து தெளிவான விளக்கங்களைப் பெறுகின்றார். பகவானது சன்னிதி மகிமையை உணர்ந்த அவர் அங்கேயே தங்கிவிட வேண்டும் என்னும் தனது ஆர்வத்தை பகவானிடம் வெளியிடுகின்றார்.

வருங் காலத்தில் அண்மையில் ஒரு பெரிய நிகழ்ச்சி உலகத்தையே புரட்டிப் போடப் போகின்றது, அது உலகத்தில் உள்ள அனைவரையும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப் போகின்றது, அந்த நேரத்தில் மெர்ஸிடிஸ் இருக்கவேண்டிய இடம் இந்தியா இல்லை, அவரது நாடே என்பதை பகவான் அவருக்கு உணர்த்தினார். அந்த நிகழ்ச்சி இரண்டாம் உலகப் போர் என்பதோ, அச் சமயம் மெர்ஸிடிஸ் பாதுகாப்பாக அவரது நாட்டில் இருக்க வேண்டியவர் என்பதோ நிச்சயிக்கப்பட்டது என்பது பின்னர் தான் தெரிய வருகின்றது.

அமெரிக்கா திரும்பிய பிறகு பல ஆண்டுகள் கழிந்து மெர்ஸிடிஸ் தனது வாழ்க்கையைப் பற்றி வெளிப்படையாக எழுதிய நூலை யாருக்குக் காணிக்கையாக்குகின்றார் என நினைக்கின்றீர்கள்?: நான் இதுவரை அறிந்திருக்கும் ஒரே ஒரு முற்றிலும்

*அகந்தை இல்லாத, உலகத்தோடு ஒட்டாத நிர்மலரான பகவான் ரமண மகரிஷிக்கு (TO BHAGAVAN RAMANA MAHARISHI THE ONLY COMPLETELY EGOLESS WORLD DETACHED AND PURE BEING I HAVE EVER KNOWN) என்று காணிக்கை ஆக்கியிருக்கின்றார். ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது நினைவுகள் அடங்கிய அந்த நூல் எழுதப்பட்டது. பொருள் வளம் குன்றியும், புற்று நோயினாலும், அவர் வேதனைப் பட்டுகொண்டிருந்த காலம் அது. அப்போதும் கூட அவரது மனதில் நிறைந்திருந்தது பகவானின் அருள் மயமான நிர்மல மோனமே. மெர்ஸிடிஸ் பகவானின் அருளை பூரணமாகப் பெற்றார் என்பதே திண்ணம்.*

*1938ல் டி அகோஸ்டாவும் 1940ல் எல்லாவும் பகவானின் சன்னிதியை அடைகின்றனர். டி அகோஸ்டாவிற்கு மூன்று நாட்களே பகவானின் அருட் சன்னிதியில் இருக்க முடிந்திருக்கின்றது. அதுவே அவரது மனதில் அவரது வாழ் நாள் வரை நீடித்து இருக்கின்றது என்பது அந்த மூன்று நாட்கள் அவருக்கு எவ்வளவு புனிதமானவை என்பதை உணர்த்துகின்றது. ஐந்து வருடங்கள் எல்லா பகவானின் அருட் சன்னிதியில் தனது சாதனையை தொடர்வதற்கு புண்ணியராய் இருந்திருக்கின்றார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் குருவருளால் உய்விக்கப் படுகின்றனர். காலம் ஒரு பொருட்டன்று. கண நேரத்தில் பகவானது கண்ணோக்கில் உள் ஆழ்ந்தவர்களும், நிட்டை உற்றவர்களும், ஞான சித்தி பெற்றவர்களும் உண்டு.*

*பொய்மையை விடுவதற்குத் தான் கால அவகாசம். மெய்யாய் இருப்பதற்கு இல்லை. ஏனெனில் நாம் எப்போதும் அதுவாகவே இருக்கின்றோம்.*

*எல்லாவின் அகமுகப் பயணத்தைப்பற்றி மேலும் அறிவோம்.*



# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### 139 வது ரமண ஜயந்தி விழா

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 139 ஆவது ஜயந்தி விழா ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 24/12/2018 திங்கட்கிழமையன்று நடைபெற்றது. அதிகாலை மங்கள இசை, பாராயணம், மஹன்யாச ருத்ராபிஷேகம், சிறப்பு பூஜை, அபிஷேக அலங்காரங்களுடன் சிறப்பாக நடந்தேறின. திரளான ரமண அன்பர்கள் கலந்து கொண்டு ரமண அருள் பெற்றனர்.

குரங்கு தோட்டத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் சாதுக்களுக்கு சிறப்பான முறையில் நாராயண சேவையும் ஜயந்தி விழாவிற்கு வருகைபுரிந்த அனைவருக்கும் ஆச்ரமத்தில் சிறப்பு உணவும் வழங்கப்பட்டது. பெங்களூர் திருமதி சக்குபாய் ஸ்ரீநிவாசன் குழுவினர், பெங்களூர் RMCL குழுவினர், மற்றும் சென்னை திரு. அபிஷேக் ரகுராம் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் ஜயந்தி விழாவையொட்டி நடைபெற்றன.

ரமண ஜயந்தி விழா ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட மதுரை ரமண கேந்திரம், திருச்சுழி சுந்தர மந்திரம், இராமநாதபுரம் முருகனார் மந்திரம் மற்றும் சென்னை, குரோம்பேட்டை ரமணாலயம் ஆகிய இடங்களிலும் இதேநாளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

# ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை

## 139 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவானின் 139 ஆவது ஜயந்தி விழா 24/12/2018 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 6 மணிக்கு மங்கள வாத்தியத்துடன் துவங்கிய இவ்விழா,*



*மஹன்யாஸம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம், ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை, அக்ஷரமணமாலை பாராயணம் என்பதாக காலையில் கொண்டாடப்பட்டது. மதியம் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில் ஸ்ரீமதி ஷ்யாமளா ராமச்சந்திரன் ஹரிகதை நடந்தபின்னர் பகவானின் திருவுருவ வீதி உலா மயிலை மாட வீதிகளில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு விழா நிறைவுற்றது. தொடர் லக்ஷார்ச்சனை பகவானுக்கு நடைபெற்றது.*

*23/12/2018 ஞாயிறன்று தேசிய கருத்தரங்கு ரமண கேந்திரத்தில் திரு. அனந்தஸ்வாமி நினைவு மண்டபத்தில் நடைபெற்றது. மாலை 2.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை வேதபாராயணத்துடன் துவங்கப்பட்ட இவ்விழாவில் திருவாளர்கள் இசைக்கவி ரமணன், திரு. கிருஷ்ணன் ஆன்மிக எழுத்தாளர் மற்றும் கேந்திரத்தின் துணைத் தலைவர் டாக்டர் எஸ். ராம்மோஹன் (ஆசிரியர் ரமணோதயம்) ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள். பேபி சஹானா தனது இனிய குரலில் பக்தியைக் குழைத்து பாடியது அனைவரையும் கவர்ந்தது. இறுதியாக 'ஸ்ரீரமண சந்நிதிமுறை' பன்னிசையாக ஓதுவார் திருமதி. ரேவதி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பக்கவாத்தியத்துடன் பாடினர்கள். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பயனுற்றனர்.*

## ரமணாலயம், குரோம்பேட்டை

### 139 ஆவது ரமண ஜயந்தி விழா

*டிசம்பர் 24 திங்கட்கிழமையன்று காலை மங்கள இசையுடன் துவங்கி வேதபாராயணம் ரமண அஷ்டோத்ர சதநாமாவளி நடைபெற்றது. 700 க்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில், திருமதி. காயத்ரி சுதர்ஷன் அவர்கள் பக்கவாத்தியத்துடன் ரமண பக்திப் பாடல்கள் பாடினார்கள். பின்னர் அனைவரும் கூட்டாக அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம் மற்றும் தியானப் பாட்டு பாராயணம் செய்தனர். மதியம் அனைவருக்கும் சிறப்பு விருந்து அளிக்கப்பட்டது.*

*டிசம்பர் 30 ஞாயிறன்று பகவானின் பிறந்தநாளில் (ஆங்கில நாளில்) முருகனார் இயற்றிய ரமண சரணப்பல்லாண்டு மற்றும் ரமண தேவமாலை கூட்டுப் பாராயணம் காலை 8 முதல் மாலை 5 வரை உணவு இடைவேளையுடன் நடைபெற்றது. திரளான பக்தர்கள் நாள்முழுவதும் பக்திப் பரவசத்துடன் பங்கேற்றனர்.*

# ரமண கேந்திரா செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

### 139 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவானின் ஜயந்தி விழா டிசம்பர் 24 திங்கட்கிழமையன்று ஸ்ரீலஸ்ரீ பரானந்த மஹராஜ் அவர்கள் முன்னிலையில் (தாயுமானவ ஸ்வாமிகள் தபோவனம்) காலை பத்து மணிக்கு துவங்கி அக்ஷரமணமாலை பாராயணம், சிறப்பு வழிபாடு, அன்னதானம் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள விழா சிறப்பாக நடைபெற்றது.*

## ஸ்ரீரமண சத்சங்கம், நங்கைநல்லூர், சென்னை

### 139 ஆவது ரமண ஜயந்தி விழா

*30/12/2018 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரவசன மண்டபத்தில் பகவான் 139 ஆவது ஜயந்தி*

*விழா நடைபெற்றது. அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கிய இவ்விழாவில் ஸ்வாமி ரமண சொரூபானந்தர் அவர்களின் சொற்பொழிவுடன் சிறப்பாக நடைபெற்றது.*

## ரமண சத்சங்கம், சூளைமேடு

### 139 ஆவது ரமண ஜயந்தி விழா

*24/12/2018 திங்கட்கிழமை காலை 5.30 மணி முதல் மஹன்யாஸம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம், ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை, அக்ஷரமணமாலை பாராயணம், அன்னதானத்துடன் சிறப்பாக நடைபெற்றது. பலநாட்களாக கொண்டாடப்பட்ட இவ்விழாவில் மைலாப்பூர் திருவாசக செந்நாவலர் திரு. சத்குருநாத ஓதுவார் அவர்கள் ரமண சந்நிதிமுறையை பன்னிசையுடன் பாடினார்.*

## ரமண சத்சங்கம், பூண்டி, தஞ்சாவூர்

139 ஆவது ரமண ஜயந்தி விழா

*ரமண மகரிஷிகளின் 139 ஆவது ஜயந்தி விழா 30/12/2018 ஞாயிற்றுக்கிழமையன்று இங்கு அமைந்துள்ள ரமண திருக்கோயிலில் ஜயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சிறப்புப் பாராயணம் பாணலிங்க அபிஷேகம் நடைபெற்றது. அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீரமண சத்சங்கம், ஒட்டன்சத்திரம்

139 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவானின் ஜயந்தி விழா டிசம்பர் 24 திங்கட்கிழமையன்று காலை 10 மணிக்கு துவங்கி அக்ஷரமணமாலை மற்றும் ரமண சந்நிதிமுறையிலிருந்து பாடல்களுடன் பாராயணம், சிறப்பு வழிபாடு, என விழா சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் அன்னப்பிரசாதம் வழங்கப்பட்டது. இதற்கு முன்பாக ஒருமண்டலத்திற்கு ரமண புராணம் நாள்தோறும் பாராயணம் செய்யப்பட்டது.*

## ஸ்ரீ ரமண மந்திரம், பழனி

139 ஆவது ரமண ஜயந்தி விழா

*ரமண மகரிஷிகளின் 139 ஆவது ஜயந்தி விழா 30/12/2018 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீசாய் சதன் சண்முகபுரம், பழனி வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்னதானம் வழங்கப்பட்டது. திண்டுக்கல் சிவ. பாலபாரதி அவர்கள் சிறப்பு சொற்பொழிவாற்றினார். திரு. N. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார். 6/1/2019 அன்று ரமண மந்திரத்தின் சார்பில் ஆதரவற்ற சிறார்கள் மற்றும் முதியோர் காப்பகத்திற்கு மதிய உணவு வழங்கப்பட்டது.*

## பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின்

139 ஆவது ரமண ஜயந்தி, ஸ்ரீரமணாலயம் டிரஸ்ட்
இராஜபாளையம்

*ரமண மகரிஷிகளின் 139 ஆவது ஜயந்தி விழா ஜனவரி 4,5, மற்றும் 6 தேதிகளில் மாலை 6 மணிமுதல் பி.எஸ்.கே. நூற்றாண்டு நினைவு மண்டபம்.*

*4/1/2019 வெள்ளியன்று திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தின் தலைவர் திரு. வே.சு. ரமணன் அவர்களின் துணைவியார் திருமதி. சுசீலா ரமணன் அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தார். துவக்கவுரையாக திரு. பூ. லோகாநாத ராஜா அவர்கள் உரையாற்றினார். இவர் 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஸ்ரீஞானரத யாத்திரையில் முக்கிய பங்காற்றியவர். தனது உரையில் எதிர்காலத்தில் ஸ்ரீ ரமணாலயம், இராஜபாளையத்தை அடுத்துள்ள மூன்று மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பள்ளிகளில் அக்ஷரமணமாலை மூலம் அனைத்து ஆசிரியர், மாணவ மாணவிகளிடையே பகவானின் வாழ்வையும் வாக்கையும் கொண்டு செல்ல இருக்கின்ற திட்டப் பணிகளை விளக்கினார். அத்துடன் இராஜபாளையத்தின் சுற்று வட்டாரத்தில்*



அமைந்துள்ள கிராமங்களில் சிற்றுந்து மூலம் பயணித்து பாராயணக் குழுக்களை விரிவு படுத்தும் நோக்கத்தையும் தெளிவுபடுத்தினார். தன்னுடன் இணைந்து பணியாற்றும் அனைத்து ரமண அன்பர்களையும் குறிப்பிட்டு துவக்கவுரையாற்றினார்.

தலைமையுரையாற்றிய டாக்டர். எஸ். ராம்மோஹன் (ஆசிரியர் ரமணோதயம்) அவர்கள் அருணாசல ரமணனின் அருள் கொடையைப் பற்றி விரிவாக உரையாற்றினார்.

அடுத்து இயல்புரையாற்றிய ஜெயஜோதி குழும தலைவரும் ரமண இயக்கத்தின் புரவலர்களுள் ஒருவருமாகிய திரு. கண்ணன் அவர்கள் தனது உரையில் தான் பகவான் ரமண மகரிஷிகளின் பெயரில் நடத்திவரும் கல்வி நிறுவனத்தைப் பற்றி கூறும்பொழுது "எனது பள்ளி நிர்வாக ஆசிரியர்களிடம் துவக்கத்தில் கூறியது என்னவென்றால் இப்பள்ளியை விட்டு வெளியேறும் ஒவ்வொரு மாணவரும் அக்ஷரமணமாலை, உபதேச உந்தியார் மற்றும் உள்ளது நாற்பது ஆகிய கிரந்தங்களை உள்கிரகித்தவர்களாக வெளியேற வேண்டும். அதுவே நமது இலட்சியம்" என்று குறிப்பிட்டது மெய்சிலிர்க்க வைத்தது.

சிறப்பு பயனுரையாக டாக்டர் திரு. ரங்கன்ஜீ அவர்கள் 'ரமணமோனம்' என்ற தலைப்பில் ஞான விளக்கம் அளித்தார். ரமண கீதையின் முக்கிய கருவாக அதன் முதல் இரண்டு

*அத்தியாயங்களை விளக்கியவண்ணம் நான் யார் என்னும் தத்துவத்தை அனைவரும் அனுபவிக்கும் வண்ணம் மிக எளிமையாக விரிவுரையாற்றியது கலந்து கொண்ட அனைவரின் உள்ளதிற்கும் அமைதி அளிப்பதாக அமைந்தது.*

*தொடர்ந்து நன்றி கூறிய ரமணாலயத்தின் புரவலர்களுள் ஒருவராகிய திரு. சீனிவாச ராஜா அவர்கள் திரு. ரங்கன்ஜீ அவர்கள் அடுத்துவரும் ஆண்டுகளிலும் ரமண கீதையை முழுவதுமாக விளக்கி உரையாற்ற வேண்டிக் கொண்டார். இவ்விழாவில் பங்கேற்ற அனைத்து கலைஞர்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோரை உபசரித்து உண்டியும் உறைவிடமும் அளித்து உதவியதில் திரு. சீனிவாச ராஜா மற்றும் திரு. லோகநாத ராஜா அவர்களின் துணைவியர்களின் பங்கு போற்றத்தக்கது.*

*5/1/2019 சனிக்கிழமையன்று சென்னை, திருமதி காயத்ரி சுதர்ஷன் குழுவினரின் 'ஸ்ரீரமணாஞ்சலி' எனும் கர்நாடக இசை நிகழ்வு பக்கவாத்தியங்களுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திய இந்நிகழ்ச்சி இவ்விழாவின் ஒரு சிறப்பம்சமாகும்.*

*6/1/2019 ஞாயிற்றுக்கிழமையன்று பாம்பே திரு. சாணக்யா குழுவினர் நிகழ்த்திய 'ஞானி' ஸ்ரீ ரமண விஜயம் எனும் நாடகம் 55 கலைஞர்கள், தேர்ந்த ஒளி, ஒலி அமைப்புடன் திரளான அன்பர்கள் கலந்து கொள்ள சிறப்பாக நடைபெற்றது.*



## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், | | |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை,*** *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



**139 ஆவது ரமண ஜயந்தி விழாவன்று (24/12/2018)**
**மயிலாப்பூர் மாடவீதிகளில்**
**ரமண திருவுருவப்பட வீதி உலா**



Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

